வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 18.01.2024 வியாழக்கிழமை | இதழ் : 18 | பக்கங்கள் : 12

## 14 அரசியல் கைதிகளே உள்ளனர்!

கொழும்பு, ஜன. 18

சிறையில் 14 தமிழ் அரசியல் கைதிகளே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் கைதிகள் விடயத்தில் 5 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். இன்னும் 14 அரசியல் கைதிகளே உள்ளனர்.

11

## பொருளாதார சீரமைப்பு முயற்சிக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு!

டாவோஸ், ஜன. 18

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர் ஜீவா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதல் மீளாய்வுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழு அனுமதி வழங்கியதன் முக்கியத்துவத்தையும்

11

# மொட்டு வேட்பாளராக ரணிலும் களமிறங்கலாம்

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஜனவரி 18

**ஜனாதிபதித் தேர்தலின்போது மொட்டுக் கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் போட்டியிடும் சந்தர்ப்பம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன கட்சியின் பத்தரமுல்லை கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைக்கு மொட்டுக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கான நான்கு வேட்பாளர்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளது.

குறித்த நான்கு பெயர்களில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளது.

எவ்வாறெனினும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக் கூடிய ஒருவரே

11

## துமிந்த சில்வாவுக்கு வழங்கிய மன்னிப்பு சட்டவிரோதமானது!

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 18

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தீர்மானம் தன்னிச்சையானது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. அத்துடன், குறித்த தீர்மானம் சட்டத்திற்கு புறம்பானது எனவும் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, அரசியலமைப்பு விதிகளை பின்பற்றாது துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட

11

## ரணிலுடன் டுபாயில் இணையும் இலங்கை அமைச்சர்கள் குழாம்!

### அங்கிருந்து உகண்டா நோக்கி பயணம்

கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 13ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்கு சென்றதுடன், அங்கு உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்த மாநாட்டிலும் பங்கேற்றிருந்தார்.

சுவிட்சர்லாந்தின் ஆசிய வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை முதலீட்டுச் சபை

11

## மார்ச் மாதம் ஜெனீவாவில் எழக்கூடிய சவால்களை முறியடிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை தீவிரம்!

கொழும்பு, ஜன. 18

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கை புதிய இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் உட்பட பல நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் எதிர்வரும் அமர்வில் எழக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான புதிய அணுகுமுறைகளை இலங்கை பின்பற்ற ஆரம்பித்துள்ளது.

அணிசேரா மாநாட்டுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகண்டா செல்லவுள்ளார். 19ஆவது அணிசேரா மாநாட்டுக்காக 120 நாடுகளின் தலைவர்கள் உகண்டாவில் கூடியுள்ளனர்.

இந்த மாநாட்டைப் பயன்படுத்தி ஆபிரிக்க தலைவர்கள் உட்பட பல தலைவர்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து

11

## ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை நாளை ஆரம்பிக்கின்றது ஐ.தே.க!

கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்களை நாளை முதல் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்க உள்ளது. அதன்பிரகாரம் ஐ.தே.கவின் முதல் பொதுக் கூட்டம் கொழும்பில் நடைபெற உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு ஒக்ரோபர் இறு திக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அரசாங்கத்தால் கடந்தகாலத்தில் ஏனைய

11

## நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 18

பாராளுமன்றத்தில் அடுத்தவாரம் நடைபெற உள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான விவாதத்தை ஒத்திவைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.


கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

“நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆழமான விவாதங்கள் அவசியமாக உள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டம் ஒரு ஆபத்தான சட்டமாகும். இதனை நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் அவசரப்படக் கூடாது.

சமூக ஊடக தளங்களில் தவறான தகவல்களை வெளியிடுவது குற்றவியல் பொறுப்பு என

11

## தமிழ் மக்கள் எதிர்நோக்கிய அவலநிலை சிங்கள மக்களிடம் சென்றடையவில்லை!



### விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.18

சிங்கள மொழி எம்மால் புறக்கணிக்கப்பட்டதால் தமிழ் மக்களின் அவலநிலை சிங்கள மக்களைச் சென்றடையவில்லை என்பதை காலமும் அனுபவமுந் தான் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது என தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.

அவரது வாராந்த கேள்வி - பதிலில் இது குறிப்பிடப்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

இன்னும் மூன்று தினங்களில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் பதவியில் அமரப் போகின்றவர் யார் என்பது தெரிந்துவிடும். மூன்று வேட்பாளர்கள் களத்தில் நின்றாலும், போட்டி என்னவோ இருவருக்கு இடையில்தான் என்பது தெரிந்ததுதான். ஒரு போட்டியாளரே தனது வாக்கையும் சிறிதரனுக்கே போடுவேன் என்று அறிவித்து விட்டார். இந்த இரண்டு வேட்பாளர்களும் கடந்த சில நாட்களாக நள்ளிரவு வரை ஓடிஓடி பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இப்படி தேர்தல் பணி ஆற்றியிருந்தால், இன்றும் சில எம்.பி.க்களை தமிழ் அரசு பெற்றிருக்குமோ என்று சிந்திக்க வைக்கின்றது அவர்களின் பிரசாரத்தை பார்க்கின்றபோது.

ஒரு வேட்பாளர் பெயரை முன்மொழிந்தவரே நேற்று சொன்னார், இருவருக்குமான இடைவெளி மிகக் குறுகி விட்டது. இருவரில் யார் வென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று.

நேற்று முன்தினம் லண்டனிலிருந்து அழைத்த நண்பர் ஒருவர் கேட்டார், என்ன ஊர்க்குருவியர் ஒரு வேட்பாளரை ஆதரிப்பதுபோல இருக்கின்றதே?" என்று.

"எந்தத் தேர்தல் என்றாலும் ஒவ்வொருவருக்கும் ஒரு தெரிவு இருக்கவே செய்யும். அதற்காக அவருக்காக பிரசாரம் செய்யவேண்டிய தேவை இந்த ஊர்க்குருவிக்கு இல்லையே" என்றேன்.

ஆனால் இரண்டு வேட்பாளர்களிலும் சில வேறுபாடுகள் இருந்தாலும், யார் தலைவராக வரவேண்டும் என்பதை அந்தக் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் தெரிவுசெய்யப் போகின்றார்கள். ஆனாலும் இருவர் பற்றியும் பேசுவதென்றால், சுமந்திரன் தனக்கு சரி என்று பட்டதை எந்தத் தயக்கமும் இல்லாமல் கூறுபவர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தனது கருத்தை துணிச்சலுடன் பொதுவெளியில் முன்வைத்தவர் அவர். அப்போது கூட இந்த ஊர்க்குருவி அவரின் அந்தத் துணிச்சலை பாராட்டியது.

ஆனால் அந்தக் கருத்தும், தமிழ் அரசு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 'சறுக்குவதற்கு' காரணமானது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் சிறிதரனின் மூலதனமே போராட்டத்தை 'கண்ணை மூடிக்கொண்டு' ஆதரிப்பதுதான். கண்ணை மூடிக்கொண்டு என்று நான் சொல்வது, அவர்களின் எந்த தவறுகளையும் எற்றுக்கொள்ளாமல், அவர்களை - அவர்களின் போராட்டத்தை ஆதரிப்பது.

இருவரையும் பற்றி எழுதுகின்றபோது, சில வருடங்களுக்கு முன்னர் சுமந்திரன் இந்த ஊர்க்குருவியிடம் சொன்ன கருத்து ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

"எனக்கு நிர்வாக வேலை என்பது சரிப்பட்டு வராது. என்னால் எதனை செய்ய முடியும் என்று எனக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் நான் சட்ட நிறுவனத்தைக் கூட தொடங்கவில்லை".

இப்படிச் சொன்னவர் அவர். இப்போது கட்சியின் தலைவர் பதவியை பெற்று விடுவதற்காக இரவு பகலாக பிரசாரம் செய்கிறார். இப்போது தன்னால் ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கமுடியும் என்பதை நிச்சயம் அவர் புரிந்துகொண்டிருப்பார் என்று நம்பலாம். அதனால்தான் அப்படியொரு பதவியை பெற விரும்புகின்றார் என்று நினைக்கிறோம்.

ஆனால் அடுத்தவர் சிறிதரன் ஒரு நிர்வாகி என்பது நமக்கு தெரிந்ததுதான். அவர் ஒரு கல்லூரியை நிர்வகித்த அனுபவம் உள்ளவர். இருவரையும் ஒப்பிடவேண்டும் என்பதற்காக இதனை எழுதவேண்டி வந்ததே தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை.

இருவரும் இருவேறு வகையில் ஆளுமை உள்ளவர்கள்தான். அதுவல்ல நமக்கு இன்று உறுத்துவது. சிறிதரன் தன்னை ஒரு தேசியவாதியாக முன்நிறுத்துகிறார். சொல்லப்போனால் தன்னை ஒரு விடுதலைப் புலிகள் இயக்க அபிமானியாக முன்நிறுத்துகிறார். எந்தக் கட்டத்திலும் சோரம்போகாத தமிழ் தேசியவாதி என்கிறார். ஆனால் சுமந்திரன் தன்னை புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொள்ளாத ஒருவராக ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கின்றார். ஆனாலும் தனது தலைமையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உழைப்பேன் என்கிறார்.

இப்போது தமிழரசு கட்சியினர் யாரை தெரிவு செய்யப் போகிறார்கள் என்பதிலிருந்து அதன் பாதை எப்படியிருக்கும் என்பதை அனுமானிக்கக்கூடியதாக இருக்கும்.

கடந்த நல்லாட்சி அரசு காலத்தில் 'எக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு பொதி குறித்து அண்மையில் ஒரு பேட்டி ஒன்றில், ஐந்து வருடங்களை அதற்காக செலவிட்டிருந்தாலும் அது வீணாகிப்போய்விடவில்லை என்றும் எதிர்காலத்தில் அதனை விட்ட இடத்திலிருந்து தொடங்க முடியும் என்றும் சுமந்திரன் கூறியிருந்தார்.

அவர் தமிழ் அரசின் தலைவரானால் எத்தகைய பணியைச் செய்யப்போகின்றார் என்பதை அதிலிருந்து நாம் அறியலாம்.

தேர்தலில் யார் வெற்றி பெற்றலாம், இருவரும் தொடர்ந்து ஒரே கட்சியில் பயணிக்கப் போகின்றவர்கள். பயணிக்கவேண்டியவர்கள். வெற்றிபெறுகின்றவருக்கு தோல்வியடைந்தவர் கைலாகு கொடுத்துவிட்டு கட்சிப் பணிகளை தொடரவேண்டும்.!

**- ஊர்க்குருவி.**

## அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒருவருக்கு 16 ஆயிரத்து 302 ரூபா தேவை!

கொழும்பு, ஜன. 18

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மாத்திரம், நாட்டில் வாழும் ஒருவர் தனது குறைந்தபட்ச அடிப்படைத் பூர்த்தி செய்வதற்கு 16 ஆயிரத்து 302 ரூபா தேவைப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொகை கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 16 ஆயிரத்து 112 ரூபாவாகப் பதிவாகியுள்ளதுடன் மாவட்ட ரீதியில் கொழும்பில் வசிக்கும் ஒருவர், ஒரு மாதத்தில் தமது குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அதிகளவு செலவு செய்யவேண்டியுள்ளது.

மேலும் நாட்டின் 25 மாவட்டங்களில் ஒருவருக்கு குறைந்தபட்ச அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான குறைந்த செலவு கொண்ட மாவட்டமாக மொனராகலை பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுகாதார அமைச்சின் முன்னாள் செயலர் உள்ளிட்ட 7 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 18

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட 07 பேர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற இமியுனோ குளோபியுலின் மருந்து கொடுக்கல், வாங்கல் தொடர்பான வழக்கு நேற்று மாளிகாகந்தை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

Isoles Biotechமருந்து நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜானக்க பெர்னாண்டோ, ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி, வைத்தியர் விஜித் குணசேகர உள்ளிட்ட 07 பேரின் விளக்கமறியலே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

## மின் கட்டண திருத்த யோசனை தொடர்பில் மக்களின் கருத்துகளை கேட்டறியத் திட்டம்

கொழும்பு, ஜன. 18

மின்கட்டணத் திருத்த யோசனை தொடர்பில் அடுத்த வாரம் முதல் பொதுமக்களிடம் கருத்துகளை கேட்டறியத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டண திருத்த யோசனை, இலங்கை மின்சார சபையால் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## சில பொருட்களின் விலைகளை குறைக்க சதொச தீர்மானம்

கொழும்பு, ஜன. 18

வற் வரி அதிகரிக்கப்பட்ட போதிலும் சில பொருட்களின் விலையை அதிகரிக்காமல் விற்பனை செய்ய சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி , சவர்க்காரம் , வாசனைத் திரவியங்கள், முகப்பூச்சு மற்றும் சிறு குழந்தைகளுக்கு தேவையான பொருட்கள் ஆகியவற்றை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

வற் வரியானது பதினெட்டு சதவீதமாக அதிகரித்தமையால் சந்தையில் சில பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அறநெறிப் பாடசாலை குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 18

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம், பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலையில் அறநெறிப்பாடசாலை சம்பந்தமான கலந்துரையாடல் மாலை 3 மணிக்கு அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர் கே.அஜித்தா, அப்பிரதேச கிராம சேவையாளர் சிவரூபன், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான ந.பொன்ராசா, வி.உமாபதி, ச.ஜெயந்தன், பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய செயலாளர் இ.உமணசேனன், பொன்னாலை பிள்ளையார் கோயில் பிரதமகுரு, கண்ணன் மடாலய தலைவர் சிவராஜா, ரெமிங்ரன் கல்விநிலைய முன்னாள் அதிபர் மனோகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இக்கலந்துரையாடலில் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண தந்த செல்வா நற்பணி மன்றத்தின் பொதுச்செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## ரயிலுடன் கார் மோதி விபத்து!

### ஆபத்தான நிலையில் நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, ஜன. 18

ஜா-எல குடஹாகபொல ரயில் கடவையில் நேற்று பிற்பகல் ரயிலுடன் கார் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் நால்வர் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க நோக்கி எரிபொருள் சுமந்து சென்ற ரயிலுடன் கார் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.



விபத்தில் காரில் பயணித்த தம்பதியரும், அவரது தாய் மற்றும் மகள் ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் கம்பஹா பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜாஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu
18.01.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், தை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# சுயநிர்ணய உரிமையின் அடிப்படை என்ன?

பொங்கு தமிழ் பிரகடனத்தின் 23ஆவது ஆண்டு, யாழ். பல்கலைக் கழகத்தில் நினைவுகொள்ளப்பட்டிருக்கின்றது. இதன்போது தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும் உச்சரிக் கப்பட்டிருக்கின்றது. தமிழ் அரசியல் சூழலில் எந்தக் கோரிக்கையை எவ்வாறு முன்வைப்பது - எந்தக் கோரிக்கையை முன்வைக்கக் கூடாது என்பதில் தெளிவிருப்பதாக தெரியவில்லை. இந்த தெளிவின்மை அவ்வப்போது ஆங்காங்கே வெளிப்படுகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றியின் உச்சத்தில் இருக்கின்றபோதே, சர்வதேச அரங்கிற்கு செல்லும்போது, சுயநிர்ணய உரிமை கோரிக்கையுடன் செல்லவில்லை. உள்ளக சுயநிர்ணய உரிமை என்னும் கோரிக்கையு டன்தான் சென்றிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வன்னி ஊடக வியலாளர் சந்திப்பில், இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டது. சர்வதேச அரங்கிற்கு செல்கின்றபோது, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையுடன் செல்வதிலுள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டே, உள்ளக சுயநிர்ண யம் தொடர்பில் பாலசிங்கம் பேசியிருந்தார். பிரபாகரன் அதனை மறு தலிக்கவில்லை. ஏன் அவ்வாறு கூறப்பட்டது?

ஏனெனில் சுயநிர்ணய உரிமை என்பது, ஒரு விவாகரத்து உரிமை போன்றது. தொடர்ந்தும் சேர்ந்து வாழ்வதில் பயனில்லை என்று கணவனோ அல்லது மனைவியோ தீர்க்கமான முடிவெடுக்கும் போது, அவர்கள் தங்களுக்குள்ள விவாகரத்து உரிமையை பிரயோகிப்பர். சுயநிர்ணய உரிமை என்பதும் அப்படித்தான். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் வாழ விரும்பவில்லையாயின் தங்களுக்கான சுயநிர் ணய உரிமையை பிரயோகிக்க முடியும் என்பதுதான் இதன் அடிப் படையாகும்.

எனவே சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வை கோருவது என்பது அடிப்படையில் பிரிந்து செல்வதற்கான உரிமையை கோருவதுதான். ஆனால், தமிழ்ச் சூழலில் இந்த சொல்லை உச்சரிக் கும் பலருக்கு இதன் தாற்பரியம் விளங்கவில்லை. இதன் காரணமா கவே தொடர்ந்தும் இவ்வாறான சொற்களை உச்சரித்துக் கொண்டி ருக்கின்றனர். அரசியல் தலைவர்கள் என்போர், புத்திஜீவிகள் என்போர் இந்த விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகள் பலமாக இருந்த போதே, அவர்கள் பயன் படுத்தாத ஒன்றை, எந்தவொரு பலமும் இல்லாத நிலையில் உச்சரிக்க முடியுமா? அவ்வாறு உச்சரிப்பது, நேர்மையானதா? 2009இற்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது, ஐக்கிய இலங்கைக்குட்பட்ட அரசியல் தீர்வுக்கு மாறிவிட்டது. தற்போது தமிழ் தேசியத்தை பிரதி நிதித்துவப்படுத்துபவர்கள் அனைவருமே ஐக்கிய இலங்கைக்குட்பட்ட அரசியல் தீர்வையே கோருகின்றனர்.

ஆனால், அரசியல் யதார்த்தமோ அவர்கள் கோரும் சமஷ்டியைக் கூட அடைவதற்கான புறச்சூழலை கொண்டிருக்கவில்லை. 74 வரு டங்களாக கிடைக்காத சமஷ்டியை, எந்தவொரு பலமும் இல்லாத, தமிழ் தேசிய அரசியல் கட்சிகளால் எவ்வாறு சாதிக்க முடியும்?

இந்த இடத்தில்தான், அரசியல் தீர்வு விடயத்தில் யதார்த்தபூர்வமான அணுகுமுறை தேவை, என்னும் கருத்தை பலரும் முன்வைக்கின்ற னர். அரசியலமைப்பில் இருப்பவற்றை முறையாக பயன்படுத்துவ திலிருந்து - அதேவேளை ஏற்கனவே மத்திக்குள் கொண்டு செல்லப் பட்டவற்றை மீளவும், மாகாணத்திற்கு கொண்டுவருவது தொடர்பான விடயத்திலிருந்து தீர்வை நோக்கவேண்டும் என்று கூறுகின்றனர். இதனையே நாமும் கூறிவருகின்றோம். அதற்காக உச்சபட்சமான கோரிக்கையை கைவிடவேண்டும் என்பதல்ல பொருள். அதற்கான வாய்ப்பு வரும் போது, அதனை கைக்கொள்ள முடியும். அதுவரையில் இருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளும் பொறிமுறை ஒன்றே இப்போது தேவையானது.

# நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்!

*யாழ்ப்பாணம், ஜன. 18*

*நயினாதீவு ஸ்ரீ நாகபூ ஷணி அம்பாளின் கும்பாபி ஷேக பெருவிழாவுக்கான பிரதிஷ்டா கிரியைகள் நேற்று ஆரம்பமாகின.*

*வரலாற்று பிரசித்தி பெற்ற மைனா தீவு நாக பூசணி அம்மனின் மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் நேற்று கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகின.*

*எண்ணைக் காப்பு*



*சாத்துதல் 22ஆம், 23 ஆம் திகதிகளில் இடம்பெற்று மகா கும்பாபிஷேகம் 24 ஆம் திகதி இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)*

# பொங்கு தமிழ் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நினைவு நேற்று

*யாழ்ப்பாணம், ஜன. 18*

*பொங்கு தமிழ்ப் பிரகட னத்தின் 23ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது.*

*நேற்று மதியம் 12 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் இந்த நினைவு தினம் இடம்பெற்றது.*

*யாழ்.பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவு தினத்தில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா. இளம் பிறையன், பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர், மாண வர்கள் கலந்துகொண்ட னர்.*

*கடந்த 2001 ஆம் ஆண்டு இதே நாளில் இடம் பெற்ற பொங்குதமிழில் தமிழ் மக்க ளின் அபிலாஷைகளான*





*சுய நிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசி யம், என்பன அங்கீகரிக்கப் படவேண்டும் என பிரகட னப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)*

# போதை மாத்திரைகளுடன் குடும்பஸ்தர் மன்னார் தாழ்வுபாடுப் பகுதியில் கைது!

*மன்னார், ஜன. 18*

*மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் நேற்று முன் தினம் செவ் வாய்க்கிழமை மாலை குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான வகை யில் சிலர் தங்கியிருப்பதாக இராணுவ புல னாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.*

*இதன்போது குறித்த வீட்டில் இருந்து 520 சட்டவிரோத போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.*

*குறித்த நபரிடம் மேற்கொண்ட விசா ரணையின்போது இந்தியாவில் இருந்து கடல் வழியாக குறித்த மாத்திரைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 18 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - தை 04
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : அஷ்டமி




**மேடம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள். உற்சாகமான நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும்

**தனுசு**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறுவீர்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது நல்லது. திடீர் பணவரவு உண்டு. உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். தான் உண்டு, தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

# இரு தரப்பு பேச்சு நடத்தி அரசு தீர்வு காண வேண்டும்

## மீனவர் கைது குறித்து அன்புமணி வலியுறுத்தல்

*சென்னை, ஜன. 18*

இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 40 பேரையும், அவர்களின் படகுகளையும் மீட்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இலங்கை மற்றும் தமிழ்நாட்டு மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், இரு நாட்டு அரசுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், “வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 28 பேரை 24 மணி நேரத்தில் சிங்களக்கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். நாகை மாவட்ட அக்கரைப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் கோடியக்கரைக்கு அருகில் இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். பொங்கல் நாள் இரவில் அவர்களை சுற்றிவளைத்து கைது செய்த சிங்களக் கடற்படை அவர்களுக்கு சொந்தமான படகையும் பறிமுதல் செய்திருக்கிறது. அதேபோல், பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 2 படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்ற 18 மீனவர்களையும் சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. இரு கைது நடவடிக்கைகளும் இந்திய கடல் எல்லையில் நிகழ்ந்துள்ளன. இலங்கைப் படையின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்களை சிங்களக் கடற்படை கடந்த 13 ஆம் திகதி கைது செய்திருந்தது. அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பா.ம.க. அன்றே வலியுறுத்தியிருந்தது.

அடுத்த நாள் இது தொடர்பாக மத்திய அரசுக்கு தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதினார். அதே நாளில் கோடியக்கரை அருகில் 10 மீனவர்களும், அடுத்த நாள் கச்சத்தீவு அருகில் 18 மீனவர்களும் கைது செய்யப்பட்டிருப்பதில் இருந்தே தமிழக அரசின் எதிர்ப்பை இலங்கை அரசு பொருட்படுத்தவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. பொங்கல் திருநாள் என்றும் பாராமல் தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்வதை மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

இலங்கையின் மீன்பிடி உரிமையில் தமிழக மீனவர்கள் பங்கு கேட்கவில்லை. தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்த பகுதிகளில் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்பது தான் தமிழ்நாட்டின் கோரிக்கை ஆகும்.

இந்த நியாயமான கோரிக்கைக்குக் கூட இலங்கை அரசு செவிசாய்க்க மறுக்கிறது. இந்த சிக்கலுக்கு தீர்வு காண வேண்டிய மத்திய அரசும் இந்த சிக்கலை கடந்த பல பத்தாண்டுகளாக வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறது.

வங்கக்கடலில் மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது அவர்களின் குடும்ப வாழ்வாதாரத்தை பாதிப்பது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவின் பொருளாதாரத்தையும் கடுமையாக பாதிக்கும்” என வலியுறுத்தியுள்ளார். (அ)

# அணைக்காத சிகரெட்டால் பறிபோன உயிர்!

*சென்னை, ஜன. 18*

அணைக்காத சிகரெட் துண்டினால் முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வேளச்சேரியில் பதிவாகியுள்ளது.

சென்னை வேளச்சேரி, ராஜலட்சுமி நகரில் வசித்து வந்த 55 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மது போதையில் புகைபிடித்து விட்டு, சிகரெட்டினை அணைக்காமல் உறங்கியுள்ளார்.

இந்நிலையில் படுக்கையில் இருந்த சிகரெட் துண்டினால் மெத்தையில் தீ மளமளவெனப் பரவியுள்ள நிலையில் குறித்த நபர் தீயில் கருதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.(அ)

# ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை அரசியல் பிரசாரம் ஆக்கும் பா.ஜ.க

## ‘துக்ளக்’ ஆண்டு விழாவில் சசிதரூர் குற்றச்சாட்டு

*சென்னை, ஜன. 18*

ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை, தேர்தல் ஆதாயங்களுக்கான அரசியல் பிரச்சாரமாக மாற்ற பாஜக முயற்சிக்கிறது என்று ‘துக்ளக்’ ஆண்டு விழாவில் காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் குற்றம்சாட்டியுள்ளார்.

‘துக்ளக்’ இதழின் 54ஆவது ஆண்டு விழா, சென்னையில் கடந்த 14ஆம் திகதி நடந்தது. அதன் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி வரவேற்றார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சசிதரூர் எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

அவர் பேசியதாவது:

மத்திய பாஜக அரசின் இந்தி, இந்து, இந்துஸ்தான் அரசியல் கவலை அளிக்கிறது. இந்த ஆதிக்க கலாச்சாரம் ஏற்கெனவே பல தென்னிந்திய அரசியல்வாதிகள் இடையே பிரச்னையை எழுப்பியுள்ளது. இந்துத்வா என்ற பெயரில் பாஜக அரசு பிரிவினையை ஏற்படுத்தி வருகிறது. இவற்றின் விளைவுகள் நாட்டின் ஒற்றுமையை அச்சுறுத்துவதால், இது மிகவும் தீவிரமான பிரச்சினை ஆகும்.

ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை, தேர்தல் ஆதாயங்களுக்கான அரசியல் பிரச்சாரமாக மாற்ற பாஜக முயற்சிக்கிறது. ராமர் கோயில் 22ஆம் திகதி திறப்பதற்கு ஒரே காரணம் அரசியல் மட்டுமே. நான் ராமர் கோயிலுக்கு செல்வேன். ஆனால், 22ஆம் திகதி செல்ல மாட்டேன் -இவ்வாறு சசிதரூர் கூறினார். (அ)

# தென் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு

*சென்னை, ஜன. 18*

இன்று முதல் 3 நாட்களுக்கு தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மையத்தின் இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பில்-

குமரிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதற்கிடையே, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசானபனிமூட்டத்துக்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இரவு வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று முதல் 20ஆம் திகதி வரையிலான 3 நாட்களுக்கு தென் தமிழக மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசானமழை பெய்யக்கூடும். வட தமிழக மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்-என்றுள்ளது. (அ)

# புதிய பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கையில் இலங்கை அரசு

## சுவிட்சர்லாந்தில் கூறினார் ஜனாதிபதி

டாவோஸ், ஜன. 18

**“இலங்கை அரசாங்கமானது புதிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக” ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் சுவிஸ் ஆசிய வர்த்தக சம்மேளனம் இணைந்து சுவிட்சர்லாந்தில் ஏற்பாடு செய்திருந்த வர்த்தகத் துறையினருடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் இலங்கை வெற்றிகரமான முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

கடன் வழங்குநர்களை கையாள்வதில் இவ்வாறான ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அதுமட்டுமல்லாது வெளி



நாட்டு நேரடி முதலீடு, ஏற்றுமதிகள் மற்றும் சேவைகள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது-என்றார். (அ)

# நீராடச் சென்ற சிறுவனை இழுத்துச் சென்ற முதலை!

கொழும்பு, ஜன. 18

களனி ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த 10 வயது சிறுவனை முதலை இழுத்துச்சென்றுள்ள நிலையில், சிறுவனை தேடும் பணி நேற்றும் இடம்பெற்றது.

கடுவெல , வெலிவிட்ட புனித அந்தோனி வீதியை சேர்ந்த10 வயதான டிஸ்ன பெரேரா என்ற சிறுவனையே முதலை நேற்று முன் தினம் இழுத்துச் சென்றுள்ளது.

குறித்த சிறுவனும், அவரது தம்பியும் தமது பாட்டியுடன் குளிப்பதற்கு சென்றுள்ளனர். பாட்டி துணி துவைக்கும்வரை சிறுவர்கள் நீராடிக் கொண்டிருந்தபோது, திடீரென முதலை வந்து சிறுவனை வாயில் கவ்வி இழுத்து சென்றுள்ளது.

இது தொடர்பில் கடுவெல பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் விரைந்தபோது சிறுவன் முதலையின் வாயில் சிக்கிக் கொண்டிருப்பதையும் பலமுறை அந்த முதலை ஆற்றில் மேல் பரப்பிற்கு வந்து சென்றுள்ளதையும் கண்டுள்ளனர்.

சிறுவன் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. அவரின் சடலத்தை தேடும் பணி நேற்று இடம்பெற்றது.

குறித்த சிறுவனின் தம்பியின் பிறந்த தினம் நேற்று முன் தினமாகும். அதனை அவர்களின் வீட்டில் கொண்டாடுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

# அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் அதிபர்கள்!

கொழும்பு, ஜன. 18

“தமக்கு உரிய தீர்வினை வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக” அதிபர்கள் சேவை சங்கத்தின் தலைவர் சிசிர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய சேவை யாப்பு காரணமாக அதிபர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக பதவி உயர்வு மற்றும் சம்பளத்தை இழந்தவர்கள் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அவதானத்தை செலுத்துமாறு கல்வி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளோம்.

அதற்கு அமைச்சரவை பத்திரம் மூலம் இதற்கு தீர்வு காண்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர். இந்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாவின் அதிபர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (அ)

# ஓட்டோக்களுக்கு கியூ.ஆர். குறியீடு



கொழும்பு, ஜன. 18

தற்போது முச்சக்கரவண்டிச் சாரதிகளாக கடமையாற்றும் அனைவரினதும் பதிவு மற்றும் தரவு முறைமை தொடர்பில் கியூ.ஆர். குறியீட்டை அறிமுகப்படுத்தும் யோசனையை கருத்தில் கொண்டு மிகக் குறுகிய காலத்திற்குள் புதிய குறியீட்டை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கான தொழில்சார் சபைகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக நேற்று முன் தினம் இடைக்கால துறைசார் வழிகாட்டல் குழு ஸ்தாபன நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

மேலும், முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட நிபுணத்துவ அமைப்பினால் முச்சக்கர வண்டிச் சாரதிகள் இணையத்தின் ஊடாக பயணங்களை மேற்கொள்ளும் முறைமையொன்றை தயாரிப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் முறைசாரா துறையில் பணிபுரியும் அனைவருக்கும் தொழில் கௌரவத்தையும் பெருமையையும் வழங்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட “கரு சாரு” திட்டத்தின் கீழ் இந்த வழிநடத்தல் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தியாவில் இருந்து வருகின்ற மாசடைந்த காற்றால் மூடுபனி

கொழும்பு, ஜன. 18

இந்தியாவில் இருந்து வரும் மாசு அடைந்த காற்று இலங்கையின் சில பகுதிகளில் மூடுபனியை போன்று காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம்தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து வரும் மாசு அடைந்த காற்றானது, பண்டாரவளை மற்றும் பதுளை போன்ற பகுதிகளில் மூடுபனியை ஏற்படுத்தியுள்ளது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

“புதுடில்லியில் இருந்து காற்று நீரோட்டங்கள் ஒரு வட்ட இயக்கத்தில் இயங்கி வருகிறது. அது டில்லியில் இருந்து வங்காள விரிகுடாவை நோக்கி பயணிக்கிறது. வங்காள விரிகுடாவில் இருந்து வளைந்து செல்லும் இந்த காற்று கிழக்கிலிருந்து இலங்கைக்குள் நுழைகிறது. இது இலங்கையைப் பாதிக்கிறது” என தெரிவித்துள்ளது.

“விரைவில் காற்றுடன் சிறிது ஈரப்பதம் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், இதன் விளைவாக சிறிதளவில் மழை பெய்யும். இதனால் மூடுபனி குறையும். இருப்பினும் இந்த மாத இறுதிக்குள் இந்தியாவில் இருந்து மேலும் காற்று நீரோட்டங்கள் வரும் என்று தெரிகிறது. தற்போது இலங்கைக்கு பெரிய அளவில் பாதிப்பு இல்லை” என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் நுவரெலியாவில் வெப்பநிலை வீழ்ச்சியடையும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மாத்தளை மாவட்டத்தில் குரங்குகளுக்கு கருத்தடை!

கொழும்பு, ஜன. 18

மாத்தளை மாவட்டத்தில் ஆண் குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாத்தளை மாவட்டத்தில் உள்ள குரங்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக அப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர். குரங்குகளின் அதிகரிப்பால் பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு இலங்கையில் முதன் முறையாக ஆண் குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் திட்டத்தை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# அறகலயவின் ஜனாதிபதி வேட்பாளராக பொன்சேகா?

கொழும்பு, ஜன. 18

மக்கள் போராட்ட (அறகலய) குழுவின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளராக இருந்த - அதேபோல் காலமுகத்திடல் போராட்டத்தில் முன்களப் போராளியாக செயற்பட்ட வசந்த முதலிகேவை களமிறக்க அவரின் வயது தடையாக இருப்பதால், அவரின் ஆதரவு பெற்ற ஒருவரை களமிறக்க வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மக்களின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை அறகலயவின் பொதுவேட்பாளராக களமிறக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் நாட்களிலும் இது தொடர்பான கலந்துரையாடல்கள் தொடரவுள்ளன. (அ)

# 2 பொலிஸாரை லஞ்ச வலையில் சிக்க வைத்த கசிப்பு வியாபாரி!

கொழும்பு, ஜன. 18

10,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச,ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

நாரம்மல பகுதியில் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளரின் வீட்டைச் சோதனை செய்து, கசிப்பு கைப்பற்றப்பட்ட நிலையில், அது தொடர்பில் சட்ட நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக இந்த இரு பொலிஸாரும் இலஞ்சம் பெற்றமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை 6.40 மணியளவில் நாரம்மல பகுதியில் உள்ள முறைப்பாட்டாளரின் வீட்டில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குருணாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 100 இலட்சம் வாக்கு பெறுவது நகைப்புக்குரியது

## கூறுகின்றார் உதய கம்மன்பில



கொழும்பு, ஜன. 18

**பொதுத்தேர்தலில் மூன்று இலட்சம் வாக்குகளைக் கூட பெறாத ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் 100 இலட்சம் வாக்குளை பெறுவதாக குறிப்பிடுவது நகைப்புக்குரியது. பொய்யான வாக்குறுதிகளை வழங்குபவர்கள் மீது நம்பிக்கை கொள்ளும் நிலையில் இருந்து நாட்டு மக்கள் முதலில் விடுபடவேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சம்பள அதிகரிப்பை கோரி சுகாதார சேவையினர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இவர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்குமாறு குறிப்பிட முடியாது.

வங்குரோத்து நிலையை தொடர்ந்து வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்தியர்களுக்கான கேள்வி அதிகளவில் உள்ளதால் வைத்தியர்கள் அந்த நாடுகளுக்கு செல்கிறார்கள்.

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது தீவிரமடைந்தால் சுகாதாரத் துறை மிக மோசமான விளைவுகளை எதிர்க்கொள்ள நேரிடும் என்பதால் வைத்தியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்துள்ளது.

ஆகவே பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது தேவைகளை மாத்திரம் நிறைவேற்றிக் கொள்ளுவற்கு முயற்சிப்பதை தொழிற்சங்கத்தினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தொழிற்சங்கத்தினரை தவறாக வழிநடத்துவதை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 3 இலட்சம் வாக்குகளை கூட பெறாத ஐக்கிய தேசியக் கட்சி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 100 இலட்சம் வாக்குகளை பெறுவதாக குறிப்பிடுவது நகைப்புக்குரியது.ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் உளவியலை பரிசோதனை செய்ய வேண்டும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன் முறையாக அரசாங்கத்தினால் களமிறக்கப்படும் ஜனாதிபதி வேட்பாளர் மிக குறைந்தளவிலான வாக்குகளை பெறுவார். இது இலங்கையின் சாதனை மாத்திரமல்ல, உலக சாதனையாகவும் கருதப்படும். ஒருவேளை கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடிக்கலாம்-என்றார். (அ)

# மன்னார் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த 18 இந்திய மீனவர்கள் கைது

மன்னார், ஜன. 18

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்கள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம் தாழ்வுப்பாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து இரண்டு ட்ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 இந்திய மீனவர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு ட்ரோலர் படகுகளுடன் கடற்படையினரால் தாழ்வுப்பாடு கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர்.

அதன்பின்னர் 18 இந்திய மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் அவர்களை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். (அ)

# போலந்து நாட்டு தம்பதியினர் மீது ஹோட்டல் உரிமையாளர் தாக்குதல்

கொழும்பு, ஜன. 18

கண்டி, ரஜபிஹில்ல மாவத்தையிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு தங்க வந்த போலந்து நாட்டு தம்பதியினரை ஹோட்டல் உரிமையாளர் தாக்கியுள்ளார்.

போலந்து நாட்டு தம்பதியினர் சுற்றுலா நிமித்தம் இலங்கை வந்து இணையத்தளம் மூலம் குறித்த ஹோட்டலில் உள்ள அறையொன்றை முன்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஹோட்டலுக்கு தங்க வந்த தம்பதியினர், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் ஹோட்டலில் இல்லாததால் அங்கு தங்க மறுத்துள்ளனர்.

இதன்போது ஹோட்டல் உரிமையாளருக்கும் தம்பதியினருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஹோட்டல் உரிமையாளர் குறித்த தம்பதியினரை தாக்கியுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது ஹோட்டல் உரிமையாளர் மது போதையில் இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தம்பதியினர் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு வழங்கியதைய டுத்து இது தொடர்பான விசாரணைகளை கண்டி சுற்றுலா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கந்தகாடு புனர்வாழ்வு முகாம் சம்பவம் விசாரணை நடத்துவதற்கு குழு நியமனம்

கொழும்பு, ஜன. 18

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்து கைதிகள் சிலர் தப்பிச்செல்ல காரணமான சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்காக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் 5பேர் கொண்ட விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணைக் குழுவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதிபதி ஹெக்டர் யாப்பா நியமிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக விசாரணை மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை மூன்று வாரங்களுக்குள் கையளிக்குமாறு அமைச்சர் குறித்த விசாரணை குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள 5பேர் கொண்ட குழுவின் ஏனைய உறுப்பினர்களாக எம்.எஸ்.பி.சூரியாப்பெரும-மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் பொலிஸ்) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, ஆர்.எஸ் ஹபுகஸ்வத்த மேலதிக செயலாளர் (நிர்வாகம்) நீதி அமைச்சு, புயுமன்தி பீரிஸ் மேலதிக செயலாளர் (சட்டம்) நீதி அமைச்சு, டீ.எம். சமன் திஸாநாயக்க மேலதிக செயலாளர் பாதுகாப்பு அமைச்சு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தைப் பிற்போடவேண்டும்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 18

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தை அரசாங்கம் பிற்போடவேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது கருத்துச் சுதந்திரத்துக்கு கடும் இடையூறு விளைவிக்கும் என தெரிவித்துள்ள சமூக நீதிக்கான தேசிய இயக்கம், பொருளாதார மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கு இது கடும் பாதிப்பை எற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகளின் அறிக்கைகளை சுட்டிக்காட்டியுள்ள சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் சுனில் ஜெயசேகர, புதிய சட்டம் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் என தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றம் சட்டமூலத்தை அரசமைப்பின் அடிப்படையிலேயே ஆராயும் என தெரிவித்துள்ள அவர், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணானவை இல்லை என்பதால் இதனை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றம் தனது சம்மதத்தை தெரிவித்துள்ள போதிலும் அரசாங்கம் உரிய நிபுணர்கள் தொடர்புபட்ட ஏனையவர்கள் பொதுமக்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் கூறினார். (அ)

# 15 நாட்களில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, ஜன. 18

இவ்வருடம் ஆரம்பமாகி முதல் 15 நாட்களில் 101,362 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நேற்று வெளியிட்டுள்ள தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுக்கு ஆண்டு 114 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கடந்த வருடம் ஜனவரி மாதம் மொத்தமாக 102,545 சுற்றுலா பயணிகளே வருகை தந்துள்ளனர்.

அதன்படி, சுற்றுலா பயணிகளின் வாராந்த வருகை சராசரியாக 46,000 ஆகவும், நாளாந்த வருகை சராசரியாக 6,700 ஆகவும் உள்ளது.

“கடந்த இரண்டு வருடங்கள் சவாலானதாக இருந்த நிலையில், இலங்கை சுற்றுலாத் துறையைச் சேர்ந்த நாங்கள் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கைகள் அதிகரித்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இதேவேளை, சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வருமானமும் அதிகரித்து வருகிறது. எனவே, இந்த செயல்திறன் அதிகரிப்பு தொழில் துறைக்கு நல்லதொரு ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது” என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகை தந்த நாடுகளின் பட்டியலில் ஜனவரி மாதத்தில் இதுவரை 16 சதவீதமான சுற்றுலா பயணிகளின் வருகையுடன் ரஷ்யா முதலிடத்திலுள்ளது.

ஜனவரி முதல் இரண்டு வாரங்களில் 15 சதவீத சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் இரண்டாம் இடத்தில் இந்தியா உள்ளது.

8 சதவீதமான சுற்றுலா பயணிகளின் வருகையுடன் ஐக்கிய இராச்சியம் மூன்றாம் இடத்தில் உள்ளது.

மேலும், ஜேர்மனி, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பூசை

யாழ்ப்பாணம், ஜன. 18



பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கிணங்க நாடு பூராகவும் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டமாகிய யுத்திய நடவடிக்கை பொலிஸாரால் நாடு முழுக்க முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் போதைப் பொருள் வியாபாரிகள் என பலரும் கைது செய்யப்பட்டு வரும் நிலையில நேற்று யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பொலிஸாரால் விசேட பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த விசேட பூசை வழிபாட்டில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட அத்தியட்சகர், யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# சரித்திரத்தில் முதல் முறை ஜனாதிபதியின் மன்னிப்பு செல்லுபடியற்றது என்று தீர்ப்பு!

## எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜன. 18

**இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**



முல்லைத்தீவு மாங்குளம் நீதிமன்றத்துக்கு பொதுமக்களின் காணி விடயம் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றுக்காக வருகை தந்திருந்தபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, துமிந்த சில்வாவுக்கு கொடுத்த மன்னிப்பை புறந்தள்ளி அது தவறாக-சட்டவிரோதமாக கொடுக்கப்பட்ட மன்னிப்பு செல்லுபடியற்றது என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை சம்பந்தமாக மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட துமிந்த சில்வாவுக்கே இந்த தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் நான் ஆஜராகி இந்த வழக்கை வாதாடி இருக்கின்றேன் .

இலங்கை சரித்திரத்தில் முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவரின் மன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது. இது வரவேற்க வேண்டிய ஒரு விடயம். வேறு சில வழக்குகளும் நிலுவையில் இருக்கின்றன.

விசேடமாக மிருசுவில் படுகொலையாளி சுனில் ரட்நாயக்கவுக்கு கொடுத்த மன்னிப்பையும் நாங்கள் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம். அந்த தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை-என்றார். (அ)

# கடவுச்சீட்டு, பணத்தை ஒப்படைப்பதற்கு முன் அனுமதிப்பத்திரம் குறித்து கவனம் செலுத்துக!

## வேலை வாய்ப்புப் பணியகம் கோரிக்கை

ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
SRI LANKA BUREAU OF FOREIGN EMPLOYMENT

கொழும்பு, ஜன. 18

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக எந்தவொரு நிறுவனத்திடமோ? அல்லது நபரிடமோ? தங்கள் கடவுச்சீட்டு அல்லது பணத்தை ஒப்படைப்பதற்கு முன்னர், அவ்வாறான தரப்பினர்களுக்கான அனுமதி தொடர்பில் கவனம் செலுத்துமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கோரியுள்ளது.

அவ்வாறான தரப்பினர்களின் உரிமம் மற்றும் அது சார்ந்த தகவல்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

இதுதவிர 1989 என்ற துரித இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி அது தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தி கொள்ள முடியும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று தருவதாக தெரிவித்து மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த பணியகம் எச்சரித்துள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்று தருவதாக தெரிவித்து இடம்பெற்ற பண மோசடி சம்பவங்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# அச்சுவேலி வைத்தியசாலையின் சிறுவர் கர்ப்பிணி பராமரிப்பு நிலையம் திறப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 18

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சை நிலையம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக கர்ப்பிணிப் பெண்களுக்கான மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சையை வழங்குவதில் சிரமத்தை எதிர்கொண்டு வந்த அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு பத்தமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவானந்தனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் முழுமையான நிதியுதவியில் 17 லட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த கட்டடம் அமைக்கப்பட்டது.

வைத்தியசாலை நலன்புரிச் சங்கச் செயலாளர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் குறித்த கட்டடத் தொகுதியினை ஆறுமுகம் சிவானந்தன் குடும்பத்தினர் மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

குறித்த கட்டட தொகுதியானது சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிகிச்சை வழங்குவதுடன் அவர்களை பராமரிப்பதற்கு ஏதுவாக இதர வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு 1.5 மில்லியன் டொலர் பெறுமதியான சூரியகாந்தி எண்ணெய் நன்கொடை

கொழும்பு, ஜன. 18

ரஷ்ய அரசாங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சூரியகாந்தி எண்ணெய் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புத் தரப்பு செயலக வளாகத்தில் நேற்று முன் தினம் இலங்கை அரசாங்கத்திடம் இந்த நன்கொடை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

*2023 டிசெம்பர் 30 ஆம் திகதி 117.3 மெற்றிக் தொன் சூரியகாந்தி எண்ணெயும், 2024 ஜனவரி 04 ஆம் திகதி 13.1 மெற்றிக் தொன் எண்ணெயும் ரஷ்ய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டது, மேலும் மொத்த நன்கொடையான 130.41 மெற்றிக் தொன் எண்ணெய் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.*



இதேவேளை, இந்த வேலைத் திட்டத்தின் முதற்கட்டமாக 351.9 மெற்றிக் தொன் சூரியகாந்தி எண்ணெய் ரஷ்ய அரசாங்கத்திடம் இருந்து 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அவசர பதிலளிப்பு திட்டத்தின் கீழ் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது மற்றும் நாடு முழுவதும் உள்ள குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு நேரடியாக இது சென்றடையும். குறிப்பாக மட்டக்களப்பு, நுவரெலியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள 8625 குடும்பங்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். தகயரான், உலக உணவுத் திட்டத்தின் இந்நாட்டுப் பணிப்பாளர் ஜெரார்ட் ரெபெலோ உள்ளிட்ட அதன் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் வெர்னான் பெரேரா, வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் அமீர் அஜ்வாட், கொழும்பு உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புத் தரப்பு செயலகத்தின் பணிப்பாளர் நாயகம். எம்.எச்.ஏ.எம். றிப்லான் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தை மேலும் 250 கடல்மைல்களால் அதிகரிக்க யோசனை!

கொழும்பு, ஜன. 18

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினை மேலும் 250 கடல்மைல் தொலைவினால் அதிகரிப்பது குறித்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேசிய சமுத்திர விவகாரங்கள் குறித்த குழுவுக்கான செயலகத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் அண்மையில் கூடிய சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் இது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்த நிறுவனமான தேசிய சமுத்திர விவகாரங்கள் குறித்த செயலகத்தின் செயற்பாடுகள், அந்த செயலகம் முகங்கொடுத்துள்ள சவால்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் கரையோரத்தில் இருந்து 200 கடல்மைல் தொலைவில் உள்ள கடற்பகுதி இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயமாக உள்ளது.

இந்தநிலையில், மேலும் 250 கடல்மைல் தொலைவான கடற்பரப்பை இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதாகத் அந்த செயலகத்தின் தலைவர் என்.பி விஜயானந்த குறிப்பிட்டார்.

பிரத்தியேக பொருளாதார வலயத்தை விஸ்தரிப்பது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சமுத்திரம் தொடர்பான சமவாயத்துக்கு அமைய பிராந்திய நாடுகளின் இணக்கப்பாடு அவசியமாகும்.

எனவே, இந்தியா உட்பட பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் இது தொடர்பிலும் மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் தேசிய சமுத்திர விவகாரங்கள் குறித்த குழுவுக்கான செயலகத்தின் தலைவர் என்.பி. விஜயானந்த தெரிவித்துள்ளார்

எரிபொருள் ஆய்வு மற்றும் பல்லுயிர் பெருக்கம் உள்ளிட்ட விடயங்கள் காரணமாக கடல்சார் வலயம் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது எனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

எனவே, பாதுகாப்பு அமைச்சையும் இணைத்துக் கொண்டு இந்த செயற்பாட்டை விரைவில் முன்னெடுக்க வேண்டியது அவசியம் என சுட்டிக்காட்டிய குழுவின் தலைவர், இது தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கோரிக்கை விடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# தென்கிழக்கு பல்கலைக்குள் புகுந்த வெள்ளத்தால் பாதிப்பு

அம்பாறை, ஜன. 18

**வெள்ள நிலமையின் பின்னர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை வழமை நிலைக்கு கொண்டுவர உபவேந்தரும், உத்தியோஸ்தர்களும் ஊழியர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் சிரமதான நிகழ்வில் ஈடுபட்டனர்.**



சீரற்ற காலநிலை, மழை, வெள்ளம் மற்றும் டீ.எஸ்.சேனநாயக சமுத்திர வான்கதவுகள் திறப்பு காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் அண்மையில் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தன.

வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளை மிகுந்த சிரமத்துடன் சுத்தப்படுத்தும் ஊழியர்களுடன் உபவேந்தர் உள்ளிட்ட குழுவினரும் இணைந்து சுத்திகரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

சீரற்ற காலநிலை மற்றும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வெள்ளநீர் புகுந்ததன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள அதேவேளை, பல்கலைக் கழகத்துக்குள் அவசர நிலையை பிரகடனப்படுத்தி சகல தரப்பு ஊழியர்களின் ஒத்துழைப்புடன் வளாகத்தில் முழுமையாக சுத்திகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா, பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில் மற்றும் பேராசிரியர்கள், கல்வி சாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ.எம். தாஜுதீன். செயலாளர் எம்.எம்.முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் இணைந்திருந்தனர்.

தற்போது பல்கலைக்கழகத்துக்குள் இருந்த வெள்ளம் வடிந்துள்ள நிலையில் தாழ்வான சில இடங்களில் தற்போதும் நீர் தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பல்கலைக் கழகத்தின் சில பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தங்களுக்கு ஏற்கனவே அனர்த்த முகாமைத்துவ பிரிவினரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் காரணமாக பாரிய சொத்து இழப்புக்களை ஊழியர்களின் மேலான ஒத்துழைப்புடன் குறைக்க கூடியதாக இருந்ததாக உபவேந்தர் குறிப்பிட்டார். (அ)

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகத்தால் மருத்துவ உபகரணங்கள்




மட்டக்களப்பு, ஜன. 18

வாழைச்சேனை நகர லயன்ஸ் கழகத்தினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது.

ஊசிகள் மற்றும் குளுக்கோமீற்றர் பரிசோதனைத் துண்டுகள் போன்ற பொருட்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கல்முனை பிராந்தியத்தில் தொற்றுநோய் பரவும் ஆபத்து

அம்பாறை, ஜன. 18

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையடுத்து தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக பெய்த மழையினாலும், டீ.எஸ்.சேனநாயக சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் கரையோரப் பிரதேசங்களில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர் வீடுகளிலும்,இடைத்தங்கல் முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

தற்போது மழை வீழ்ச்சி குறைந்துள்ள நிலையில் தேங்கியுள்ள வெள்ளநீர் சுகாதாரமற்றுக் காணப்படுவதால் இந்நீரில் நடமாடுவதனையும், சிறு பிள்ளைகள் நீராடுவதனையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் பெற்றோர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்டம், தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், கொதித்தாறிய நீரை பருகுமாறும் அறிவுறுத்தியுள்ளதுடன், தொடர்ச்சியான காய்ச்சல் இருந்தால் வைத்தியர்களை நாடுமாறும் வைத்திய கலாநிதி சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார். (அ)

## மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் வாகன விபத்தில் ஒருவர் மரணம்!

### இருவருக்கு பலத்த காயம்!!




மட்டக்களப்பு, ஜன. 18

களுவாஞ்சிகுடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றும் லொறியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் பாரிய விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் களுவாஞ்சிகுடி பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியும் மட்டக்களப்பு பகுதியிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியும் குருக்கள்மடம் செல்லக்கதிர்காம முருகன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வளைவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இவ் விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்தில் பலியானதுடன் மேலும் இருவர் பலத்த காயங்களுடன் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞர் மண்டூர் பகுதியை சேர்ந்தவர் எனவும் காயமடைந்தவர்கள் மண்டூர் மற்றும் எருவில் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மகிந்தவுடன் இணைய தமிழர் தயாராக இல்லை

### கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 18

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஆட்சியை அமைக்க தமிழர்களோ, தமிழ் மக்களின் பிரதிநிதிகளோ எந்த விதத்திலும் தயாராக இல்லையென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - பட்டிருப்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விரும்பும் ஒரு வேட்பாளரை நிறுத்துவோமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூறியிருக்கின்றார்.

ஆயுதப்போராட்டம் 2009 இல் மௌனிக்கப்படும்போது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களையும் ஆயிரக்கணக்கான போராளிகளையும், சர்வதேசத்தின் துணைகொண்டு அழித்த ஜனாதிபதியாவார். புரையோடிப்போயுள்ள இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை



13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலே 13 பிளஸ் கொடுப்பேன் என சர்வதேசத்திற்கு ஓர் உத்தரவாத்தத்தைக் கொடுத்து எமது மக்களையும் போராட்டத்தையும் அழித்தார்.

2009 இற்குப் பின்னர் தமிழ் மக்களின் முக்கியமான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் 18 சுற்றுப் பேச்சுவார்த்தைகளைச் செய்து, இறுதியில் ஏமாற்றிய மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுடன் மீண்டும் பேசி ஒரு ஜனாதிபதி வேட்பாளரைக் கொண்டு வருவேன் என அ கூறினாலும், தமிழ் மக்களோ தமிழ் மக்களின் பிரதிநிதிகளோ அவருடன் இணைந்து ஓர் ஆட்சியை ஏற்படுத்துவதற்கு எந்த விதத்திலும் தயாராக இல்லை.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பொதுஜனப் பெரமுன கட்சியின் ஆதரவுடனேயே ஜனாதிபதியாக இருக்கின்றார்.

அதல பாதாளத்திற்குச் சென்ற இலங்கையை மீட்பதாக அவர் கூறிக்கொண்டிருந்தாலும் பொதுஜன பெரமுனவை விட்டு அவர் இன்னும் வெளியே வில்லை. ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனாதிபதி ஒத்திவைத்தது போன்று ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது. இந்நிலையில் பொதுஜன பெரமுனவில் இருக்கின்ற பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவின் பக்கமும், இன்னும் சிலர் சஜித் பிரேமதாசவின் பக்கமும் சென்றிருக்கின்றார்கள்.

யாராக இருந்தாலும். இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மைகளையும் செய்யவில்லை-என்றார். (அ)

# சர்வதேச ரீதியில் புகையிலை பயன்பாடு வீழ்ச்சியடைந்தது

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

ஜெனிவா, ஜன. 18

**உலகளாவிய ரீதியில் புகையிலை பயன்பாடு வீழ்ச்சியடைந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

**2000 ஆம் ஆண்டு மூன்றில் ஒருவர் புகைப்பிடிப்பவராக இருந்த நிலையில், தற்போது குறித்த தொகையானது ஐந்தில் ஒருவராக குறைவடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.**



2000 ஆம் ஆண்டில் 1.36 பில்லியனாக இருந்த 15 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பாவனையாளர்கள் தற்போது 1.25 பில்லியனாக குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2030 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை அதிகரிக்கப்படுகின்ற போதிலும் புகையிலை பயன்படுத்துவோர் தொகை 1.2 பில்லியனாக குறைவடையும் என ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன.

தென்கிழக்கு ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புகைபிடிப்போர் அதிகம் காணப்படுவதாகவும், சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் புகைத்தல் பழக்கம் கொண்டவர்கள் எனவும் உலக சுகாதர ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, எகிப்து, ஜோர்தான் மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட சில நாடுகளில் புகையிலை பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உலகளாவிய ரீதியில் சுமார் 362 மில்லியன் பேர் புகையிலை பொருட்களை பயன்படுத்துவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அண்மைய ஆண்டுகளில் புகையிலை கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், மனநிறைவு அடையும் வகையில் இல்லை என உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார மேம்பாட்டுத் துறையின் பணிப்பாளர் ரூடிகேர் க்ரேஷ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புகையிலைத் தொழில் எண்ணற்ற உயிர்களை பலிகொடுத்து இலாபத்தை ஈட்டுவதனை கண்டு தாம் வியப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பதவியை துறந்தார் நியூஸிலாந்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்



வெலிங்டன், ஜன. 18

நியூஸிலாந்தின் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், வர்த்தக நிலையங்களில் திருடியதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நியூசிலாந்து பசுமைக் கட்சியின் எம்.பி.யும் அதன் நீதித் தொடர்பாளருமான கோல்ரிஸ் கஹ்ராமன் என்பவரே இவ்வாறு பதவியை இராஜினாமா செய்தவர் ஆவார்.

ஆக்லாந்து, வெலிங்டனில் அமைந்துள்ள உயர்தர வர்த்தக நிலையங்களில் திருடியதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து கோல்ரிஸ் கஹ்ராமன், தனது செயல்களுக்கு முழுப் பொறுப்பேற்று உடன் அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந் நிலையில் தனது செயல் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர்,

எனது வேலை தொடர்பான அழுத்தங்களால் எனது மனநலம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெளிவாகத் தெரிகின்றது. நான் நிறைய பேரை ஏமாற்றிவிட்டேன், அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன் என்று கூறியுள்ளார்.

கோல்ரிஸ் கஹ்ராமன் தனது குடும்பத்துடன் சிறுவயதில் ஈரானில் இருந்து வெளியேறினார், அவர்கள் அனைவரும் நியூசிலாந்தில் அரசியல் தஞ்சம் பெற்றனர்.

2017 ஆம் ஆண்டில், ஈரான் -ஈராக் போருக்குப் பின்னர் நியூஸிலாந்திடம் புகலிடம் கோரி, அங்கு பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அகதி என்ற பெருமையை அவர் படைத்திருந்தார்.

அரசியலில் நுழைவதற்கு முன்பு அவர், ருவாண்டா, கம்போடியா மற்றும் தி ஹேக் ஆகிய நாடுகளில் உள்ள ஐ.நா நீதிமன்றங்களில் குற்றவியல் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் வழக்கறிஞராக பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# சீனாவில் அதிகரிக்கும் இறப்பு விகிதம்!

பீஜிங், ஜன. 18

சீனாவில் இறப்பு விகிதமானது நாளுக்கு நாள் உயர்வடைந்து கொண்டே செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனாவில் கடந்த 2023 ஆம் ஆண்டு 2 மில்லியன் அளவுக்கு மக்கள் தொகை கணிசமான அளவு குறைவடைந்தது.

இந்நிலையில் சீனாவில் தற்போது 1.4 பில்லியன் மக்களே உள்ளனர் என தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

சீனாவில் ஆரம்ப காலங்களில் மக்கள் தொகையைக் குறைக்க ‘ஒரு குழந்தை திட்டம்‘ நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் மக்கள் தொகை கணிசமான அளவு குறைவடைந்த நிலையில் கடந்த 2016ஆம் ஆண்டில் குறித்த திட்டத்தை சீன அரசு தளர்த்தியது.

இதில் ஓரளவுக்கு பலன் கிடைத்தபோதும், பிறப்பு விகிதம் எதிர்பார்த்த அளவிற்கு உயரவில்லை. மாறாக இறப்பு விகிதமானது நாளுக்கு நாள் உயர்வடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈரானை எச்சரிக்கும் பாகிஸ்தான்!

இஸ்லாமாபாத், ஜன. 18

“ஈரான் அரசு கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்” என பாகிஸ்தான் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.


பாகிஸ்தானைக் குறிவைத்து பாலோசிஸ்தான் பகுதியில் ஈரான் அரசு நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ள நிலையிலேயே பாகிஸ்தான் அரசு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, “ஈரான் எமது மீது மேற்கொண்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது எங்கள் வான்வெளியில் நடத்தப்பட்ட அத்துமீறல். இத்தாக்குதலினால் அப்பாவிக் குழந்தைகள் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் சிறுமிகள் சிலரும் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதல் தொடர்பில் ஈரான் அரசு கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்” இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# செங்கடல் பகுதியில் மற்றொரு வணிகக் கப்பல் மீது தாக்குதல்!

## பதற்றம் அதிகரிப்பு



நியூயோர்க், ஜன. 18

செங்கடலில் மோல்டா கொடியுடன் பயணித்த கிரேக்க நாட்டுக்கு சொந்தமான கப்பல் ஏவுகணையால் தாக்கப்பட்டதாக கடல்சார் பாதுகாப்பு நிறுவனமான ஆம்ப்ரே தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் வணிகக் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட மூன்றாது தாக்குதல் இதுவாகும். இதனால் செங்கடல் பகுதியில் பதற்றம் நீடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது ஹூத்திகளுக்கு ஈரான் வழங்கிய ஆயுதங்களை கைப்பற்றியதாக அமெரிக்க இராணுவம் அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பின் பின்னணியிலேயே தாக்கதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதற்கிடையில், யேமனில் ஹூதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹூத்தி நிலைகள் மீது ஒரே இரவில் அமெரிக்கா மேலும் பல தாக்குதல்களை முன்னெடுத்திருந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செங்கடலில் வணிகக் கப்பல் கள் மீதான ஈரான் ஆதரவுக் குழுவின் தாக்குதல்களைத் தொடர்ந்து கடந்த 11ஆம் திகதி அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஹூததி இலக்குகளுக்கு எதிராக வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

இந்த தாக்குதலை தொடர்ந்து பதில் தாக்குதல் நடத்தப்படும் என ஹூத்திகள் அறிவித்திருந்தனர். இதன்படி, யேமனின் ஹூதி பகுதியில் இருந்து தனது போர்க்கப்பல் ஒன்றை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணையை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

ஹமாஸூடனான இஸ்ரேலின் போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நவம்பர் முதல் ஹூத்தி போராளிகளால் பல கப்பல்கள் குறிவைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலுக்குச் சொந்தமான, கொடியிடப்பட்ட அல்லது இயக்கப்படும் அல்லது இஸ்ரேலிய துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்களை தாங்கள் குறிவைப்பதாக ஹூத்திகள் கூறுகின்றனர்.

எனினும் தாக்கப்படும் கப்பல்களுக்கும் இஸ்ரேலுக்கும் தொடர்பில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. செங்கடல் சூயஸ் கால்வாய் வழியாக இந்தியப் பெருங்கடலை மத்திய தரைக் கடலுடன் இணைக்கிறது.

சமீபத்திய தாக்குதல்கள் காரணமான பெருவாரியான கப்பல்கள் தென்னாபிரிக்காவை சுற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ‘ஸ்டென்ட்’ குழாய்கள் தட்டுப்பாட்டால் இருதய நோயாளிகள் பெரும் பாதிப்பு!

**கொழும்பு, ஜன. 18**
**கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் “ஸ்டென்ட்” குழாய்கள் தட்டுப்பாடு காரணமாக இருதய நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளரான வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக இருதய நோயாளிகளின் உயிராபத்தில் இருப்பதோடு சத்திரசிகிச்சைக்காக காத்திருப்போரின் சிகிச்சைக் காலம் நீடிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவிக்கையில்,

“ஸ்டென்ட்” குழாய்கள் தட்டுப்பாடு காரணமாக இவற்றை இறக்குமதி செய்வது தொடர்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# வியாபார நடவடிக்கைக்காக தனிப்பட்ட கணக்குகளை பயன்படுத்த வேண்டாம்!

## இலங்கை மத்திய வங்கி முக்கிய அறிவிப்பு

கொழும்பு, ஜன. 18
பொது மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு, இலங்கை மத்திய வங்கி விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிவிப்பில் இலங்கை மத்திய வங்கி, வணிக நடவடிக்கைகளுக்கு தனிப்பட்ட வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்து பொது மக்களுக்கு எச்சரித்துள்ளது.

வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களுக்காக தனிப்பட்ட கணக்குகளை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள இலங்கை மத்திய வங்கி, வணிகத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் தங்கள் வணிக பரிவர்த்தனைகளுக்கு தனியான வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# பிக்மீ சாரதிகள் மீது தொடரும் தாக்குதல்

## நேற்றும் கோண்டாவிலில் ஒருவர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜன. 18
யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் முச்சக்கர வண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த பயணிகள் மீது பிறிதொரு முச்சக்கர வண்டி சாரதியினால் தாக்கப்பட்டுள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றின் (பிக்மீ) ஊடாக போக்குவரத்து சேவைகளை வழங்கி வரும் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் தனக்கு வந்த அழைப்பின் பிரகாரம் கோண்டாவில் ரயில் நிலையத்திற்கு சென்று, அங்கிருந்து பயணிகளை ஏற்றிச் செல்ல முற்பட்டுள்ளார்.

அதன் போது அங்கு வந்த மற்றுமொரு முச்சக்கர வண்டி சாரதி, பயணிகளை ஏற்ற வந்த சாரதியையும், அதில் இருந்த பயணியையும் தாக்கியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சாரதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் கட்டணமானிகள் இன்றியே முச்சக்கர வண்டி சாரதிகள் கட்டணம் அறவிட்டு வந்தனர், நீண்ட காலத்தின் பின்னர் யாழில் தற்போது கட்டமானிகள் பொருத்திய சில முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட்டு வருவதுடன், தனியார் நிறுவனங்கள் ஊடாகவும் போக்குவரத்து சேவைகளில் சில முச்சக்கர வண்டிகள் இணைந்து சேவையில் ஈடுபட்டுள்ளன.

அந்நிலையில் கட்டமானிகள் பொருத்தாத மற்றும் தனியார் போக்குவரத்து சேவையினருடன் இணையாத முச்சக்கர வண்டி சாரதிகள், மற்றைய சாரதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர்

யாழ்ப்பாணத்தில் இதுவரை ஐந்துக்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ள போதிலும் பொலிஸார் உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுப்பதில்லை எனும் குற்றச்சாட்டு சாரதிகள் மத்தியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டெங்கு ஒழிப்பை சிறப்பாக செயற்படுத்தும் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை



யாழ்ப்பாணம், ஜன. 18
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட 35 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கடந்த 2 ஆம் திகதி முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரிவு என்கிற ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இடம்பெற்று வருகிறது.

பொதுமக்களின் பூரண ஒத்துழைப்புடன் இடம்பெற்று வரும் மேற்படி வேலைத்திட்டத்தில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்களும் இணைந்து விழிப்புணர்வூட்டி வருகிறார்கள்.

தனித்தனியாக கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நிறைவடைந்த பின்னர் வாராந்தம் வெள்ளி தோறும் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சரியான முறையில் குப்பை கூளங்களை உரிய முறையில் அகற்றி வருவதோடு, தற்போது டெங்கு தடுப்பு வேலைத்திட்டத்தையும் சிறப்பாக முன்னெடுக்கும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் கம்சநாதன் மற்றும் பணியாளர்களை பொதுமக்கள் பாராட்டி வருகின்றார்கள். (அ)

# நாடளாவிய ரீதியில் மேலும்1,024 பேர் கைது!

கொழும்பு, ஜன. 18
நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் யுக்திய நடவடிக்கையின் கீழ் கடந்த 24 மணிநேரத்தில் 1024 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஏராளமான போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் 13 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் 8 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மலையக ரயில்சேவை வழமைக்கு

கொழும்பு, ஜன. 18
மலையகத்துக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நானுஓயாவிலிருந்து நேற்று முன் தினம் கொழும்பு நோக்கி புறப்பட்டு வந்த விசேட ரயில் கிரேஸ்வெஸ்டனுக்கும் நானுஓயாவுக்கு இடையில் தடம்புரண்டதன் காரணமாக மலையகத்துக்கான ரயில் சேவைகள் தடைப்பட்டன.

இதனால் கொழும்பிலிருந்து பதுளை நோக்கி வந்த பயணிகளை தலவாக்கலை ரயில் நிலையத்திலிருந்து பஸ்களின் ஊடாக அனுப்புவதற்கும் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பயணிகளை நானுஓயாவிலிருந்து அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

இதனால் மலையக பகுதிகளுக்கு வருகை தந்த பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

கடந்த சில வாரங்களாக பல தடவைகள் ரயில்கள் தடம்புரள்வு காரணமாக போக்குவரத்து தடைப்பட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 500 கட்டடங்களை அகற்ற தீர்மானம்

கொழும்பு, ஜன. 18
கொழும்பில் கால்வாய்களை அடைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள 500 சட்டவிரோத கட்டடங்களை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பல நிர்மாணங்கள் நீரின் ஓட்டத்தை தடை செய்துள்ளதாகவும், இதனால் கொழும்பு நகரில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

சில குடியிருப்புகள் நேரடியாக நீர்வழிகளைத் தடுக்கின்றன, மற்றவை கால்வாய்ப் படுகைகளில் கட்டப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (அ)

# பல்கலைக்கழக மாணவியின் உயிரைப் பறித்தது டெங்கு!

கொழும்பு, ஜன. 18
மற்றுமொரு மாணவி டெங்கு நோயினால் உயிரிழந்த சம்பவம் ஹொரண பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

23 வயதான குறித்த மாணவி போருவதண்ட, மாப்புட்டுகல, மானெல் உயன பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், கொழும்பு கற்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்று வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த மாணவி டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு ஹொரண வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# கரட் விலை 2,000 ரூபா வரை உயர்வு

கொழும்பு, ஜன, 18
கரட் ஒரு கிலோகிராமின் சில்லறை விலை 2,000 ரூபா வரை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது வரலாற்றில் கரட் ஒரு கிலோகிராமுக்கு பதிவான அதிகூடிய விலையென அதன் தலைவர் ரோஹண பண்டார குறிப்பிட்டார்.




கரட் ஒரு கிலோகிராமின் மொத்த விலை 1,700 ரூபா அளவில் காணப்படுவதாக அவர் கூறினார்.

அத்துடன் லீக்ஸ் ஒரு கிலோகிராம் 450 - 500 ரூபா அளவிலும் போஞ்சி ஒரு கிலோகிராம் 1,000 ரூபாவாகவும் பச்சை மிளகாய் ஒரு கிலோகிராம் 800 ரூபாவாகவும் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அதிக மழையுடனான வானிலையினால் பயிர்ச்செய்கைகள் அழிவடைந்தமையே இதற்கான காரணமென அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் ரோஹண பண்டார குறிப்பிட்டார்.இன்னும் ஓரிரு வாரங்களில் இந்த விலைகள் குறைவடைய லாம் என அவர் கூறினார். (அ)

## தமிழ்மக்கள்...

பட்டுள்ளது.

அவரது வாராந்த கேள்வி- பதில் அறிக்கை வருமாறு-

**கேள்வி:-** நீங்கள் 'சிங்களம் மட்டும்' கொண்டு வந்ததால் சிங்களம் படிப்பதை நிறுத்தியதாக முன்னர் கூறினீர்கள். பின் ஏன் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் மும்மொழிகளையுந் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள்? அத்துடன் அன்று சிங்களம் படிப்பதைப் புறக்கணித்தீர்கள் இன்று ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கக் கூடாதென்று கூறியுள்ளீர்கள். உங்கள் கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தெரிகின்றதே?

**பதில் :-** உங்கள் கேள்விகள் இரண்டுக்கும் பதில்- அனுபவமும் காலமும் எமக்குப் புகட்டிய பாடங்களின் அடிப்படையில் தான் அவ்வாறு கூறினேன் என்பது. "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டுவந்ததால் உணர்ச்சிவசப்பட்டு அந்தக் காலத்தில் கல்லூரியில் தொடர்ந்து சிங்களம் படிக்க மறுத்தேன். மேலும் சட்டக் கல்லூரியில் சிங்களம் படிப்பிக்க கல்லூரி நிர்வாகம் நடவடிக்கைகள் எடுத்த போது என் சிங்கள மற்றும் தமிழ் நண்பர்களுடன் சென்று சட்டக்கல்லூரி தலைமையாசிரியரிடம் எமக்கு சிங்களம் பயிற்றுவதாக இருந்தால் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் மொழி படிப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். அதற்கு அவர் இணங்கவில்லை. சிங்கள வகுப்புக்களைப் பகிஸ்கரித்தோம். சில காலத்தின் பின்னர் ஓரிரு முஸ்லீம் மாணவர்களுக்கு சிங்களம் படிப்பிப்பது சாத்தியமில்லை என்று கண்டு அதனைத் தொடராது விட்டுவிட்டனர்.

அன்றைய சூழலில் அவ்வாறு செய்தது உண்மைதான். ஆனால் காலம் மாறி விட்டது. அன்று நான் சிங்களம் முறையாகக் கற்றிருந்தால் இன்று சிங்கள மொழியில் தமிழ் மக்களின் குறைகளை சிங்கள மக்களுக்கு சிறப்பாக எடுத்துரைத்திருப்பேன். என்றாலும் பேச்சு வாக்கிலே நான் கற்ற சிங்களத்தை வைத்து மகாநாயகர்களுடன் சிங்களத்தில் பேசியுள்ளேன். பல சிங்கள செவ்விகளை ஊடகங்களுக்கு அளித்துள்ளேன்.

காலம் எமக்கு ஒரு முக்கிய பாடத்தைப் புகட்டியுள்ளது. இலங்கை யின் அரசியல்ப் பிரச்னைகளுக்கு சிங்களத் தலைவர்களின் இன ரீதியான அரசாங்கம் மட்டும் காரணமல்ல.சிங்களப் பொதுமக்களுடன் நாம் அவர்கள் மொழியில் பேசி எமது குறைகளை அவர்களுக்கு எடுத்துரை யாமையும் ஒரு காரணமாகும். சிங்கள மக்களுக்கு அவர்களின் வரலாறு, தமிழர்கள் பற்றிய வரலாறு, தொல் பொருட்கள் பற்றிய விளக்கங்கள், சுதந்திரப் போராட்டங்களில் தமிழ்த் தலைவர்களுடைய பங்கு போன்ற பலதும் மறைக்கப்பட்டு வருகின்றன. எமது பிரச்சனைகள், குறைகள், எமது அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள் போன்றவை சிங்கள மக்களைச் சென்றடைவதில்லை. சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சில நேரங்களில் நான் சிங்களத்தில் வழங்கும் செவ்வியை தணிக்கை செய்தே ஊடக சொந்தக்காரர்கள் வெளியிடுகின்றார்கள். இதை செவ்வி எடுப்பவர்களே எனக்குக் கூறியிருக்கின்றார்கள்.

தமிழர்களின் உண்மைக்குரல், உரிமைக்குரல் சிங்கள மக்களின் காதுகளுக்கு எட்டப்படாது என்பதே அவர்களின் குறிக்கோள். முள்ளிவாய்க்காலில் எவ்வாறு சாட்சிகள் இல்லாமல் இன அழிப்பு நடைபெற்றதோ அதே போல சிங்கள, ஆங்கில ஊடகங்களில் தணிக்கைகள் மூலம் தமிழர் எதிர்பார்ப்புக்களை, அவர்கள் பற்றிய உண்மைகளை சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தாமலே பத்திரிகைகள், ஊடகங்களை நடத்துகின்றார்கள். கி.பி 10ஆம் நூற்றாண்டில் சோழர் வருகையின் போது தங்கள் சிங்கள நாட்டுக்கு வந்த கள்ளத்தோணிகளே நாங்கள் என்பது எமது தமிழர்கள் பற்றிய சிங்கள மக்களின் கருத்தாக சிங்கள ஊடகங்கள் எம்மைப் பற்றி சித்திரித்துள்ளன.

என்னுடைய சில கேள்வி பதில்களை வாசித்துவிட்டு ஒரு படித்த சிங்கள இளைஞர் என்னுடன் தொலைபேசியில் பேசினார். பேச்சு கிட்டதட்ட பின்வருமாறு அமைந்தது - இளைஞர் - "சேர்! உங்களைக் கொல்ல வேண்டும் என்ற கொலை வெறியில் இருந்தேன். என்றாலும் நீங்கள் குறிப்பிட்ட பேராசிரியர் ஆரியரட்ணவின் சிங்கள நூலான "தெமள பௌத்தயா"வை (தமிழ் பௌத்தர்கள்) வாசித்த பின்னர்தான் உங்கள் கூற்றுக்களின் உண்மையைப் புரிந்து கொண்டேன். உங்களை வந்து சந்திக்க விரும்புகின்றேன்."

நான் - "தாராளமாக வாருங்கள்! கொல்ல வேண்டும் என்றாலும் வாருங்கள்! எனக்கு இப்பொழுது 83 வயது (அப்போதைய வயது). தொடர்ந்து இந்த உலகத்தில் இருக்க வேண்டும் என்ற ஆசை எதுவும் எனக்கில்லை."

இளைஞர் :"இல்லை சேர்! நான் வெறும் பேச்சுக்கே அவ்வாறு சொன்னேன்." இன்றுவரை அவர் என்னை வந்து சந்திக்கவில்லை. ஆனால் அவர் தமது மனமாற்றத்தை வெளியிட்டமை தான் இந்தக் கேள்வி - பதிலுக்கு முக்கியமானது. சிங்கள மக்களுக்கு எம்மைப் பற்றிய போதிய அறிவு இல்லாமையே தமிழ் -சிங்கள உறவானது இன்றும் மேம்படாமல் இருப்பதற்குக் காரணம்.

ஆகவேதான் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர், ஜனாதிபதித் தேர்தலுக்குத் தரப்படப் போகும் விசேட சலுகைகளைப் பாவித்து தமிழ் மக்களின் பிரச்சனைகள் சிங்கள மக்களைச் சென்றடையும் வண்ணம் சிங்களத்தில் ரூபவாகினி மூலம் பேச முடியும் என்று கூறினேன். அதற்காகவே சிங்கள அறிவு பெற்ற ஒரு தமிழரை முன்னிறுத்துவது உசிதம் என்றேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பேராசிரியர் கோசலை மதன் போன்றவர்கள் சிங்களத்தில் பேசக்கூடியவர்கள். வடகிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து வைத்திருப்பவர்கள். சிங்கள மொழி எம்மால் புறக்கணிக்கப்பட்டதால் தமிழ் மக்களின் அவலநிலை சிங்கள மக்களைச் சென்றடையவில்லை என்பதை காலமும் அனுபவமுந் தான் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

அடுத்து ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்தால் என்ன நடக்கும்? அரசாங்கத்திற்கு சார்பான வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகள் தேர்தலைப் புறக்கணிக்க மாட்டா? மும்முரமாக வேலைசெய்து புறக்கணித்த மக்களின் வாக்குகளையும் தேர்தலில் பதியச்செய்து விடுவார்கள். அடுத்த நாள் பத்திரிகையில் பின்வருமாறு கொட்டை எழுத்துக்களில் தலையங்கங்கள் வருவன -

"புறக்கணிப்பு பிசுபிசுத்து விட்டது. வடகிழக்கு தமிழ் மக்கள் எவர் பேச்சையும் கேட்காது சென்று இன்னாருக்கு வாக்களித்தார்கள்." இப்படி நடக்கக் கூடும் என்பதும் எமக்கு காலமும் அனுபவமும் கற்றுத்தந்த பாடங்கள் தான்- என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ரணிலுடன்...

ஏற்பாடு செய்திருந்த வர்த்தக வட்டமேசை மாநாடு உட்பட பல்வேறு முதலீட்டாளர்களுடனும் ஜனாதிபதி சந்திப்புகளை நடத்தியிருந்தார்.

இந்நிலையில், சுவிட்சர்லாந்து பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி நேற்று உகண்டா நோக்கி பயண மாகி உள்ளார். அவர் டுபாய் வழியாக உகண்டா செல்கிறார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் பங்கேற்க உள்ள அமைச்சரவைக் குழாம், டுபாய் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளதுடன், டுபாயில் ஜனாதிபதியுடன் இணைந்து உகண்டா செல்ல உள்ளனர்.

உகாண்டா தலைநகர் கம்பாலாவில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி இந்த பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## நிகழ்நிலை...

சட்டம் வரையறுத்துள்ளது. இந்த சரத்தை பயன்படுத்தி ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட எவரும் கைது செய்யப்படலாம் என்பதால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் அல்லது எக்ஸ் போன்ற சமூக வலையத்தளங்ளில் பதிவிடப்படும் விடயங்கள் தொடர்பிலும் சட்டத்தின் உள்ளடக்கத்தின் பிரகாரம் கையாளலாம். அதனால் இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்யாமல் நிறைவேற்றக் கூடாது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட தவறான தகவல்களால் நானும் பாதிக்கப்பட்டிருந்தாலும், சட்டத்தின் தற்போதைய வடிவம் மிகவும் ஆபத்தானதாகும்." என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (அ)

## துமிந்த...

ஜனாதிபதி பொது மன்னிப்பை இரத்து செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதிய ரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய குழாம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், துமிந்த சில்வா தொடர் பில் உயர் நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான நட வடிக்கைகளை முன்னெடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட மேலும் நால்வருக்கு 2016 ஆம் ஆண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இருப்பினும், 2019 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் 2021 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

இந்த பொது மன்னிப்பின் சட்டபூர்வ தன்மையை கேள்விக்குட்படுத்தி மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

ஹிருணிகா பிரேமச்சந்திர, அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கஸாலி ஹூசைன் ஆகியோரினால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான விசாரணை உயர் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இறுதித் தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## மார்ச்...

ஆராயவுள்ளார்.

மார்ச் மாத அமர்வில் இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பாக பொறுப்புக்கூறும் திட்டத்தை முன்வைத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதித் தீர்மானத்தை இலங்கை நிராகரித்துள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைக்கும் நாடுகளில் பிரதானமானதாக பிரிட்டனுடன் இலங்கை ஜெனிவா அமர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செங்கடலில் ஹௌத்தி கிளர்ச்சியாளர் களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கப்பல்களை அனுப்புவதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் விடுத்த வேண்டுகோள்களை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள விடயமறிந்த வட்டாரங்கள், ஜெனிவா அமர்விற்கு முன்னர் இந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காகவே ஜனாதிபதி கப்பலை அனுப்ப இணங்கினார் என தெரிவித்துள்ளன.

## ஜனாதிபதி...

தேர்தல்களை பிற்போட முடிந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் அல்லது சர்வஜன வாக்கெடுப்பொன்றை கட்டாயம் நடத்தியே ஆக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள பின்புலத்தில், அனைத்துக் கட்சிகளும் தமது பிரசார நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளன.

நாளை ஐ.தே.க தமது பிரசாரக் கூட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஐ.தே.க பொது வேட்பாளராக அறிவிக்க உள் ளது. கடந்த வாரம் இடம்பெற்ற கட்சி யின் நிர்வாகக் குழு கூட்டத்திலும் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவை நிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

என்றாலும், ஜனாதிபதி நீண்ட உத்தியோகப்பூர்வ பயணமொன்றை சுவிட்சர்லாந்து மற்றும் உகண்டாவுக்கு மேற்கொண்டுள்ளார். இதனால், இந்தக் கூட்டம் ஏற்கனவே திட்டமிட்டது போல் பிரமாண்டமாக நடைபெறுமா அல்லது இடைநிறுத்தப்படுமா என்பது தொடர்பிலான அறிவிப்புகள் எதனையும் ஐ.தே.க இதுவரை வெளியிடவில்லை.

## பொருளாதார...

அவர் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளார்.

மேலும் இந்த அனுமதி, இலங்கை பின்பற்றிய முக்கியமான மறுசீரமைப்புகளுக்கான அங்கீகாரம் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜீவா குறிப்பிட்டுள்ளார். (அ)

## 14அரசியல்...

அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்றன.

கந்தக்காடு முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அங்கு புனர்வாழ்வு பெறுபவர்கள், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மற்றும் யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள்.

மூன்று பிரிவுகளாக கந்தக்காடு முகாம் இயங்கி வருகின்றது. அங்கு இடம்பெற்ற சம்பவங்களையடுத்து அதன் நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை இடமாற்றம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. போதைப' பொருள் பாவனை அதி கரித்து வருகின் றது. அது இளம் சமு தாயத்தையும் பாதித்துள்ளது.

யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது - என்றார்.

## மொட்டு...

வேட்பாளராக நியமிக்கப்படுவார்.

அதன் காரணமாக கடைசி நேரத்தில் இந்தப் பட்டியலில் பெயர் இல்லாத புதிய ஒருவர் கூட களமிறக்கப்படலாம்.

வேட்பாளர் குறித்து கவலைப்படத் தேவையில்லை. வேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல. வெற்றி பெற முடியுமா என்பதுதான் முக்கியம்.

ஏனெனில் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், தமது அரசியல் முகாமுக்கு வெற்றியைத் தரும் எந்தக் கட்சி அல்லது சக்தியுடன் வேண்டுமானாலும் பேச்சுவார்த்தை நடத்த தயார்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மறுசீரமைப்பதற்காக கிராமிய மக்களைத் தெளிவூட்டும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம்!

## சகலரையும் ஒத்துழைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

**யாழ். மாவட்டத்தில் இன்று முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

**வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளது. சிறப்பாக மாவட்டத்திலுள்ள அனைத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்த வேலை திட்டத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

குறிப்பாக திருநெல்வேலி, கொக்குவில், யாழ் நகரை அண்டிய பகுதிகளில் அதிகளவானோர் கடந்த இரண்டரை மாதங்களுக்குள் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

ஆகவே இது ஒரு முக்கியமான பிரச்னையாக காணப்படுகின்றது. கடந்த டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் 2,800 பேருக்கு மேற்பட்டவர்கள் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்துக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

பொதுமக்கள் தங்களுடைய வீட்டுப் பகுதி, சுற்றுப் பகுதிகளில் டெங்கு நோய் பரவும் அபாயத்தை இல்லாது ஒழிக்க வேண்டும்.

இப்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தினசரி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இன்று காலை 8.30 மணி முதல் கொக்குவில் கிழக்கு பகுதியில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் 20 குழுக்களாக இந்த பணியை ஆரம்பிக்க இருக்கின்றோம்.

இந்த வேலை திட்டத்தில் அந்தந்த கிராமங்களில் இருக்கின்ற பொதுமக்கள் சார் அமைப்புகள் இணைந்து கொள்ளவேண்டும் - என்றார். (அ)

# பெப்ரவரி 5ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 18

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வினாத்தாள் கசிந்ததால், உயர்தர விவசாய விஞ்ஞான வினாத்தாளின் பகுதி 1 மற்றும் 2 ஆகிய இரண்டையும் மீள நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளது. குறித்த பரீட்சை பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பமாகவிருந்த மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கை, பெப்ரவரி 5 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வினாத்தாள் கசிவு தொடர்பில் ஆசிரியர் ஒருவரும், பாடசாலை உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# கங்காராம விகாரையில் இந்திய தூதுவர் வழிபாடு!



கொழும்பு, ஜன. 18

இந்திய - இலங்கை மக்களின் ஆரோக்கியம், அமைதி மற்றும் செழுமை ஆகியவற்றை வேண்டியும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலையான நட்புறவை வேண்டியும் புத்தபெருமானிடம் பிரார்த்திப்பதற்காக இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா , கங்காராம விகாரைக்கு நேற்று காலை விஜயம் செய்திருந்தார்.

இதன்போது தூதுவரின் துணைவியாரான திருமதி தனுஜாவும் இணைந்து கொண்டிருந்தார்.

விகாரையின் பிரதி குருவான சங்கைக்குரிய கலாநிதி கிரிந்தே அஸாஜி தேரர் தூதுவரை விகாரையில் வரவேற்றதுடன், 2017 ஆம் ஆண்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இவ்வாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு சர்வதேச வெசாக் தின நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தமையை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்திருந்தார்.

அத்துடன் புத்தபெருமான் ஞானம் பெற்ற இந்திய மண்ணில் தான் கற்றுக்கொண்ட விடயங்களையும் இச்சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொண்டிருந்த சங்கைக்குரிய அசாதி தேரர், இரு நாடுகளுக்கும் இடையிலான நாகரீக உறவுகளின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து இவ்விகாரையில் நடைபெற்ற விசேட பூஜையினை அடுத்து தூதுவர் ஜாவும் திருமதி தனுஜா ஜாவும் புனித பிரித் நூலினை அணிவித்து அவர் ஆசி வழங்கினார்.

இச்சந்தர்ப்பத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முகரீதியான உறவுகளை குறிப்பாக ஆழமாக வேரூன்றி இருக்கும் நாகரீக, வரலாற்று, மத மற்றும் கலாசார ரீதியிலான பிணைப்புகளை வலுப்படுத்துவதற்காக இந்திய தலைமைத்துவம் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டினை தூதுவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 10 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையின் கீழ் மத ஸ்தலங்களை சூரிய மின்சக்தி மூலமாக இணைப்பதற்காக அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த உறவுகளை வலுவாக்குவதற்காக முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பௌத்த துறவிகள் இந்தியாவில் கல்வியினை தொடர்வதற்காக வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டங்கள் குறித்தும் சங்கைக்குரிய தேரருடன் தூதுவர் கலந்துரையாடியிருந்தார். (அ)

# மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளில் 'ஹெபடைடிஸ் பி' கட்டுப்பாட்டுக்குள்!

கொழும்பு, ஜன. 18

மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் 'ஹெபடைடிஸ் பி' நோயை கட்டுப்படுத்தியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு நேற்று அறிவித்துள்ளது.

இரண்டு நாடுகளும் அதிகளவான குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளமை மற்றும் நோயினால் குறைந்தளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளமை அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'சுகாதாரத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இந்த நாட்டு மக்கள் சமூகங்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காக மேற்கொள்ளும் தீவிர முயற்சிகளை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கும் வகையில், மாலைதீவு மற்றும் இலங்கையின் சாதனைக்கு நான் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்." என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் பூனம் கேத்ரபால் சிங் தெரிவித்துள்ளார்.

ஹெப்படைடிஸ் பி என்பது ஹெப்படைடிஸ் பி வைரஸால் ஏற்படும் தொற்று நோய் ஆகும். இது கல்லீரலைப் பாதிக்கிறது மற்றும் கடுமையான (குறுகிய கால) அல்லது நாள்பட்ட (நீண்ட கால) நோயை ஏற்படுத்தலாம். குழந்தைகளிடையே நீண்டகால தொற்றுநோயை உருவாக்கும் ஆபத்து அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பின்னிரவு நடுக்காட்டில் டீசலின்றி நின்ற யாழ்-மட்டு. பயணிகள் பஸ்!

காரைதீவு, ஜன. 18

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு நோக்கி வந்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் நட்ட நடுநிசியில் டீசல் இல்லாமல் புணானை நடுக்காட்டுப் பகுதியில் நின்றது.

யானைப்பயத்தில் பயணிகள் பதற்றம் அடைந்தார்கள். தவித்தார்கள்.

இச் சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை 3.30 மணி அளவில் புணானையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பை நோக்கி புறப்பட்ட இ. போ.சபைக்குச் சொந்தமான பஸ் நடுக்காட்டில் டீசல் இல்லாமல் நின்றுவிட்டது. பயணிகள் பதற்றம் அடைந்த னர்.

சற்று நேரத்தில் அவ்வழியில் வந்த ஒரு லொறியில் இருந்து 10 லீற்றர் டீசலை கடனாக பெற்று அதன் பின்னர் வாழச்சேனைக்கு வந்து வாழைச்சேனை டிப்போவில் டீசல் நிரப்பிய பின் காலை 6 மணி அளவில் மட்டக்களப்பை வந்து அடைந்தது .

நீண்ட தூர பஸ் பயணத்தின் போது சாரதி, நடத்துநர்கள் எரிபொருள் கொள்ளளவு நிலைமையை உறுதிப்படுத்தாமல் பயணிகளை இப்படி நடுக்காட்டில் தவிக்க விட்டமை பாரதூரமானதாகும் என்று பயணிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சேவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கேட்டுக்கொண்டனர். (அ)

# தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஜன. 18

அரச தாதியர் சங்கம் நேற்று புதன்கிழமை காலை 7.00 மணி முதல் இன்று வியாழக்கிழமை காலை 7.00 மணி வரை நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளது.

பல சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் தற்காலிகமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், அரச தாதியர் சங்கம் நேற்று பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கும் நிதி இராஜாங்க செகான் சேமசிங்கவுக்கும் இடையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் எதிர்பார்த்த தீர்வு கிடைக்காத காரணத்தினால் நேற்று அரச தாதியர்கள் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுதத் ஜயசிறி தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# 62 பந்துகளில் 137 ஓட்டங்கள்

## சாதனை புத்தகத்தில் ஆலன்

டுனெடினில் புதன்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து தொடக்க ஆட்டக்காரரர் பின் ஆலன் வெறும் 62 பந்துகளில் 137 ஓட்டங்களை எடுத்து சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதித்தார்.

சர்வதேச ரி-20 கிரிக்கெட் அரங்கில் நியூஸிலாந்து வீரர் ஒருவர் பெற்றுக் கொண்ட அதிகபட்ச தனிநபர் ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

முன்னதாக கடந்த 2012 ஆம் ஆண்டு கண்டி, பல்லேகலவில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான ரி-20 ஆட்டத்தில் பிரண்டன் மெக்கல்லம் 72 பந்துகளில் 123 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

அந்த சாதனையை நேற்றைய ஆட்டத்தில் ஃபின் ஆலன் முறியடித்ததுடன் மட்டுமல்லாது சர்வதேச ரி-20 இன்னிங்ஸ் ஒன்றில் அதிக சிக்ஸர்களை விளாசிய வீரர் என்ற சாதனையினை படைத்த ஆப்கானிஸ்தானின் ஹஸ்ரதுல்லா ஜாசாய்யின் சாதனையினையும் நியூஸிலாந்து வீரர் 16 சிக்ஸர்களுடன் சமன் செய்தார்.

ஹஸ்ரதுல்லா ஜாசாய் கடந்த 2019 ஆம் ஆண்டு தேராதூனில் நடைபெற்ற அயர்லாந்துடனான ஆட்டத்தில் 16 சிக்கஸர்களை பெற்றிருந்தார்.

பின் ஆலனின் அதிரடியான துடுப்பட்டம் பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியில் நியூஸிலாக்கு 224 ஓட்டங்களைப் பெற வழி வகுத்தது.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 179 ஓட்டங்களை மாத்திரம் பெற முடிந்தது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று பேட்டிகள் கொண்ட ரி-20 தொடரினை நியூஸிலாந்து 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ள நிலையில் நான்காவது ஆட் டம் எதிர்வரும் 19 ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெறும்.

# 4 நாடுகள் பங்கெடுக்கும் உதைபந்து ‘வேர்ல்ட் சீரிஷ்’



பிபாவின் அனுசரணையுடன் நான்கு நாடுகள் பங்கெடுக்கும் உலகக் கிண்ண கால்பந்து தொடரை இலங்கையில் நடத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்டாரின், டோஹாவில் அண்மையில் நடைபெற்ற ஆசியக் கிண்ண தொடக்க விழாவின் போது இதற்கான யோசனை இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் பிபா தலைவரால் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த உலகத் தொடர், போட்டியில் பங்கெடுக்கும் நாடுகளுக்கு 2027 பிபா உலகக் கிண்ண தகுதிச் சுற்றுகளின் இரண்டாம் கட்டத்திற்கு முன்னேறுவதற்கான வாய்ப்பினை வழங்கும்.

இந்த போட்டியில் இலங்கையுடன் மற்றுமொரு ஆசிய நாடும், ஓசியானியா நாடொன்றும், ஆபிரிக்க பிராந்தியத்தில் இருந்து ஒரு நாடும் விளையாடும்.

இலங்கை கால்பந்து சம்மேளனம் மற்றும் பிபா இணைந்து இந்த போட்டி பற்றிய உத்தியோகப்பூர்வ அறிவிப்பினை எதிர்வரும் நாட்களில் வெளியிடும் என்று இலங்கை உதைபந்து சம்மேளன தலைவர் உமர் ஜஸ்வர் குறிப்பிட்டுள்ளார்.

# மெஸ்ஸிக்கு விருது

2023ஆம் ஆண்டுக்கான பிபாவின் சிறந்த உதை பந்து வீரர் விருதை ஆர்ஜென்ரீனா அணியின் லியோனல் மெஸ்ஸி வென்றுள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்த விருதை மெஸ்ஸி பெற்றுள்ளார்.

அத்துடன், பார்ஸிலோனா அணியின் கால் பந்து வீராங்கனை அய்ரனா பொன்மற்றி மகளிர் பிரிவில் சிறந்த சர்வதேச வீரர் விருதை தட்டிச் சென்றார்.





# சிம்பாப்வேயிடம் வீழ்ந்த இலங்கை


இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட 20-20 கிரிக்கெ கட் தொடரில் 2 ஆவது ஆட்டத்தில் சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி, துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது துடுப்பாட்டத்தில் சரித் அசலங்க 69 ஓட்டங்களை யும், அஞ்சலோ மெத்திவ்ஸ் 66 ஓட்டங்களையும் பெற்றனர். அதேவேளை, நேற்று முன் தினம் நடந்த போட்டிக்கு நுவான் துஷாரவுக்கு பதிலாக டில்ஷான் மதுசங்க அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், 174 என்ற ஓட்ட இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 19.5 ஓவர்களில் 6 விக்கட்டுகளை இழந்து 178 ஓட்டங்களை பெற்று 4 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் கிரேய்க் எர்வின் 70 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

# சிறந்த வீரராக பட் கம்மின்ஸ்



கடந்த டிசெம்பர் மாதத்துக்கான ஐ.சி.சி.யின் சிறந்த வீரராக அவுஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ் தெரிவாகியுள்ளார்

சர்வதேச கிரிக்கெட் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது சிறப்பாக பந்து வீசியமைக்காக அவருக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டிசெம்பர் மாதத்துக்கான ஐ.சி.சி சிறந்த வீராங்கனைக்கான விருதை இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் தீப்தி சர்மா பெற்றுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய அணிகளுக்கு எதிரான கிரிக்கெட் போட்டிகளின் போது சிறப்பாக செயற்பட்டமைக்காக அவர் கடந்த மாதத்துக்கான சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது.

ஐசிசியின் மாதாந்த சிறந்த வீராங்கனைக்கான விருதை தீப்தி சர்மா பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

# கிரிக்கெட் நிறுவனத்தின் வருமானம் வெளிப்படையாக கையாளப்படுகிறது

இலங்கை கிரிக்கெட் சபைக்கு கிடைக்கும் வருமானம் வெளிப்படையாக கையாளப்படுகின்றது என இலங்கை கிரிக்கெட் சபையின் பதில் செயலாளர் கபுவத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு- சினமன் கிராண்ட் நட்சத்திர ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட, நடைபெற்றுவரும் இலங்கை - சிம்பாப்வே தொடர் மற்றும் அணிக்கான அனுசரணையாளரை அறிவிக்கும் நிகழ்வு இடம் பெற்றிருந்தது.

இதன்போது, இலங்கை கிரிக்கெட் சபையின் பதில் செயலாளர் கபுவத்த, இலங்கை கிரிக்கெட் அணியின் ஒருநாள் தலைவர் குசல் மெண்டிஸ், ரி-20 அணியின் தலைவர் வனிந்து ஹசரங்க, நிப்போன் பெயின் நிறுவனத்தின் தலைமை முகாமையாளர் நேமந்த அபேசிங்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, அரங்கத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர்களால் கேள்வி கேட்கப்பட்டது. இதில் அணியின் தேர்வு எவ்வாறு அமைகின்றது என அணியின் ஒருநாள் தலைவர் குசல் மெண்டிஸிடம் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், தற்போது அணியுள்ள பல வீரர்கள் இன்னமும் இரு உலகக்கிண்ண தொடரில் விளையாடக் கூடிய உடற்தகுதியுடையவர்கள். ஆகையால், குறிப்பட்ட தொடருக்காக மட்டும் வீரர்களை தேர்வுசெய்து அவர்கள் மீது மட்டும் கவனம் செலுத்த முடியாது என ஒருநாள் அணியின் தலைவர் குசல் மெண்டிஸ் தெரிவித்தார்.



மேலும், போட்டியை கண்டு இரசிக்க வரும் இரசிகர்களாலும் தமக்கு பலன் உள்ளதாக குறிப்பிட்ட குசல், இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற மைதானங்களில் விளையாடும் போது இரசிகர்களால் தமக்கு வழங்கப்படும் ஆதரவு மற்றும் அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாக உள்ளதாகவும் கூறினார்.

இதன்பிறகு இலங்கை கிரிக்கெட் சபையின் பதில் செயலாளர் கபுவத்தவிடம் கிரிக்கெட் நிறுவனத்தின் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து வினவப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர்,

இலங்கை கிரிக்கெட் சபை இரு வழிகளில் வருமானம் கிடைக்கின்றது. அனுசரணையாளர்கள் மூலமும் ஐ.சி.சி.இனாலும் வருமானம் கிடைக்கின்றது. இதில் ஐ.சி.சி.யினால் கிடைக்கும் வருமான நிபந்தனைக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டது.

கிரிக்கெட் நிறுவனத்துக்கு கிடைக்கும் வருமானம் வெளிப்படையாக கையாளப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கிடைக்கும் வருமானம் பல சேவைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. லேடி ரிட்ஜ்வே மருத்துவமனைக்கு உதவியளிக்கப்பட்டது. அத்துடன் கொவிட் காலங்களில் உதவிகள் வழங்கப்பட்டன.

இதனிடையே எதிர்வரும் காலங்களில் நாட்டிலுள்ள அனைத்து மைதானங்களிலும் போட்டியை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ளவர்கள் கிரிக்கெட் போட்டிகளை கண்டு மகிழலாம் எனவும் தெரிவித்தார்.

(அ)

# அன்று ஆஸிப் பெண் - இன்று டென்மார்க் ராணி! ‘பப்பி’ல் (PUB) மலர்ந்த காதல் அரியணையில்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



அவுஸ்திரேலியாவில் பிறந்த மேரி டொனால்ட்சன், டென்மார்க்கில் 14.01.24 ஞாயிறு அன்று கோபன்ஹேகனில் அவரது கணவர் ஃபிரடெரிக் மன்னராக அறிவிக்கப்படும் போது டென்மார்க்கின் ராணியாகின்றார்.

**தஸ்மேனியாவில் வளர்ந்த மேரி :**

1980களில் அவுஸ்திரேலியாவின் புறநகர்ப் பகுதியான, தஸ்மேனிய மாநில ஹோபார்ட்டில் (Tasmania, Hobart) வளர்ந்த மேரி டொனால்ட்சனின் ஆரம்ப வருடங்கள், சாதாரண மத்திய தர குடும்ப வாழ்வாக இருந்தது.

கணிதப் பேராசிரியையின் மகளான மேரி, இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரருடன், அவர் தனது பள்ளிப்படிப்பை நம்பிக்கையுடனும் வளர்ந்து வரும் லட்சியத்துடனும் மேற்கொண்டார்.

**‘பப்பி’ல் (PUB) மலர்ந்த காதல்:**





ஆனால் மேரிக்கு எதிர்காலம் என்ன நடக்கும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை. சிட்னியில் 2000 ஆம் ஆண்டில் ரியல் எஸ்டேட்டில் மேரி வேலைக்கு மாறினார். அப்போது டென்மார்க் இளவரசர் பிரடெரிக் (Fredrick) ஒலிம்பிக் போட்டிகளுக்காக சிட்னி வந்து இருந்தார். செப்டம்பர் 16, 2000 அன்று சிட்னி பப் தி ஸ்லிப் இன்னில் மது அருந்துவதற்காக தனது சகோதரர் இளவரசர் ஜோகிம், அவரது உறவினர் கிரீஸ் மற்றும் டென்மார்க் இளவரசர் நிகோலாஸ், நோர்வே இளவரசி மார்த்தா மற்றும் அஸ்டூரியாஸ் இளவரசர் ஆகியோருடன் வருகை தந்தார்.

ஆறாம் பெலிப்பேவுக்கு ஆஸ்திரேலிய நண்பர் ஒருவர் இருந்தார். அந்த நண்பர் தனது சகோதரியை அழைத்தார். அவர் மேரியுடன் குடி இருந்த தனது சொந்த நண்பரை அழைத்தார். இதன் பின் ஃபிரடெரிக் மேரியின் சந்திப்பு காதலாக உடனடியாக மலர்ந்தது.

அதன்பின் 2002இல் மேரி டென்மார்க்கிற்கு குடிபெயர்ந்தார். பின்னர் இராச மரியாதைகளுடன் மே 14, 2004 அன்று, ஃபிரடெரிக் - மேரி கோபன்ஹேகன் கதீட்ரலில் திருமணம் செய்து கொண்டனர்.



**(‘பப்பி’ல் (PUB) மலர்ந்த காதலால், அரசவையில் ஏறிய அவுஸ்திரேலியாவில் பிறந்த மேரி டொனால்ட்சன் இரு கண்டங்களையும் இணைக்கும் அதிஷ்டப் பெண்ணாக மிளிர்கிறார்.**

**அரியணைக்கு புது ராஜா !**

டென்மார்க்கில் கடந்த 52 வருடமாக ராணியாக இருந்து வருகிறார் 2ம் மார்கரெட். இவர்தான் ஐரோப்பாவிலேயே நீண்ட காலம் ராணியாக இருந்த சாதனைக்குரியவர். டென்மார்க் ராணியாக இருக்கும் 2ம் மார்கரெட், ஜனவரி 14ம் தேதியுடன் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ராணியின் மூத்த மகனும், பட்டத்து இளவரசருமான இளவரசர் பிரடெரிக் மன்னராக ஞாயிறு முடி சூட்டப்பட்டார்.

இங்கிலாந்தைப் போலவே, டென்மார்க்கிலும் அரசின் அதிகாரப்பூர்வ அதிகாரங்கள் எல்லாமே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடம்தான் உள்ளன.

புத்தாண்டையொட்டி முன்னாள் ராணியார் தொலைக்காட்சியில் உரையாற்றியபோது ஓய்வு பெறுவதாக இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

1972ம் ஆண்டு அவர் ராணியாக முடி சூட்டப்பட்டார். இந்த நிலையில் திடீரென தனது ஓய்வை அவர் அறிவித்துள்ளார். புத்தாண்டையொட்டி வருடா வருடம் மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றுவார் ராணி மார்கெரட். அந்த வகையில் இந்த ஆண்டு உரையின் போதுதான் தனது ஓய்வு குறித்து அவர் முறைப்படி அறிவித்தார்.

தற்போது ராணி மார்கரெட்டுக்கு 83 வயதாகிறது. ராணியின் இந்த அறிவிப்பு டென்மார்க் மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இருப்பினும் ராணியின் உடல் நலக்குறைவுதான் அவரை ஓய்வு முடிவுக்கு இட்டுச் சென்றதாக கருதப்படுகிறது. கடந்த பிப்ரவரி மாதம் அவருக்கு முதுகில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் நாட்டின் வருங்காலம் குறித்து அதிகம் கவலைப்பட ஆரம்பித்தார் ராணி. தனது வாரிசை முன்கூட்டியே அறிவித்து விட வேண்டும் என்றும் அவர் முடிவெடுத்தார். அதன்படியே தற்போது தனது முடிவை அவர் அறிவித்துள்ளார்.

**ஓய்வு பெறும் ராணி:**

இதுகுறித்து ராணி மார்கரெட் கூறுகையில், சரியான நேரத்தில்தான் நான் முடிவெடுத்துள்ளேன். எனது தந்தைக்குப் பின்னர் இந்தப் பொறுப்புக்கு வந்து 52 ஆண்டுகளாகிறது. டென்மார்க் ராணி பதவியிலிருந்து ஜனவரி 14ம் தேதியன்று நான் விலகுகிறேன். எனது மகன் இளவரசர் பிரடெரிக்கிடம் மணி மகுடத்தை ஒப்படைக்கவுள்ளேன் என்று கூறினார்.

ஐரோப்பாவிலேயே நீண்ட காலம் ராணியாக இருந்த பெருமை இங்கிலாந்து ராணியிடம்தான் இருந்து வந்தது. கடந்த 2022ம் ஆண்டு அவர் மறைந்த பின்னர் ராணி மார்கரெட்தான், நீண்ட காலம் ராணியாக இருந்து வருகிறார். மேலும் டென்மார்க் வரலாற்றில் நீண்ட காலம் ராணியாக இருந்த பெருமையும் அவருக்கே உண்டு.

டென்மார்க் மக்களின் அன்பை தனது சிறு வயது முதலே பெற்ற பெருமைக்குரியவர். மன்னர் 9வது பிரடெரிக் மற்றும் ராணி இங்கிரிட் ஆகியோருக்கு மகளாக 1940ம் ஆண்டு பிறந்தவர் ராணி மார்கரெட்.

மிகமிக ஆழமான சிந்தனை கொண்டவர் ராணி மார்கரெட். அவரது திறமைகளுக்கு டென்மார்க் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பு உண்டு. தொல்லியல் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல தொல்லியல் ஆய்வுகளில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டவர்.

1953ம் ஆண்டு தனது 31வது வயதில் அரச வாரிசாக அறிவிக்கப்பட்டார். இவரது கணவர் பெயர் ஹென்றி டி லாப்ரடே டி மான்பிஸாட். இவர் பிரெஞ்சுக்காரர். 2018ம் ஆண்டு அவர் காலமானார்.

அன்றைய ஆஸிப் பெண், இன்றைய டென்மார்க் ராணியாக அரியணை ஏறுவது வியத்தகு அதிஷ்டம் எனலாம்.

‘பப்பி’ல் மலர்ந்த காதலால், அரசவையில் ஏறிய அவுஸ்திரேலியாவில் பிறந்த மேரி டொனால்ட்சன் இரு கண்டங்களையும் இணைக்கும் அதிஷ்டப் பெண்ணாக மிளிர்கிறார்.



# இலங்கையினை பொருளாதார நெருக்கீட்டு நிலையில் இருந்து ஜனநாயகத்தை மேம்படுத்தலுக்கான உத்தி

**மருத்துவர் சி. யமுனாநந்தா**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தளம்பல் நிலையில் ஜனநாயக சூழல் அற்றுப் போகும் தன்மையும் நிர்வாக அதிகாரிகளது சர்வாதிகாரப் போக்கு அதிகரிக்கும் தன்மையும் உள்ளது. இத்தகைய சூழலில் புதிய மக்கள் பிரதிநிதிகளின் ஆளுமை மிகவும் அவசியமானதாகும். எமது இளைய சமூகத்தில் இருந்து புதிய அரசியல் தலைவர்களை உருவாக்க வேண்டிய ஜனநாயகப் பொறுப்பு அனைத்து மக்களுக்கும் உள்ளது.

பொருளாதார மேன்னிலை மூன்று மட்டங்களில் உருவாக்க வேண்டும். முதலாவது நுண்ணிதிய விருத்தி **(Micro Level)** தனிநபர் குடும்ப மட்டத்தில் உருவாக்கப் படல் வேண்டும். இங்கு வறிய மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படல் வேண்டும். இதனால் சமூக உளப்பிரச்னைகள் இல்லாது போகும். இரண்டாவதாக இடைநிலை **(Meso Level Economic Development)** மேற்கொள்வதற்கு கிராம மட்ட, பிரதேச மட்ட, மாவட்ட மட்ட, மாகாண மட்ட பொருளியல் செயற்பாடுகள் அவசியமானவையாகும். இதற்கு முக்கியமானது உள்ளூராட்சிகளுக்கும் மாகாண சபைகளுக்கும் உரிய மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படலே ஆகும்.

எமது இடைநிலை பொருண்மிய மேன்மைக்கு **(Meso Level Economic Development)** தற்போதய பொருளாதார தளம்பல் நிலையில் மாகாண சபைத் தேர்தல்களும், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் மிகவும் முக்கியமானது.

மூன்றாம் நிலை பொருண்மிய மேன்பாடு **(Macro Level Economic Development)** ஒரு நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத் திட்டமிடலில் தங்கியுள்ளது. இதற்கு சிறந்த வெளிநாட்டு இராஜதந்திர அணுகுமுறைகளும் ஊழல் அற்ற வெளிப்படையான அரசியல் அணுகுமுறைகளும் அவசியமாகும். இதற்கு முதலில் பாராளுமன்ற பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படல் வேண்டும். அதன்பின் சனாதிபதி தேர்தல் நிகழ்த்தப்படல் வேண்டும்.

சமூக அரசியல் செயற்பாடுகளுக்கு எமது பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களும் மாகாண சபைத் தேர்தலுகளும் முக்கியமானதாகும். ஒரு பிரதேசத்தின் பொருளாதாரத்தினை மேம்படுத்த தற்போதைய சூழலில் இவையே அவசியமானவை. இத்தேர்தல்கள் நடைபெறாவிடின் அரசியல் ஆளுமைகளுக்கான வெற்றிடத்திதை நாம் ஏற்படுத்திவிடுவோம். மாறாக சனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல்கள் மதவாதம் இனவாதத்தை மையப்படுத்தி சமூக முரண்பாடுகளை அதிகரிக்கும்.

குறிப்பாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் அதிக அளவிலான சமூக நோக்கிலான அரசியல் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய ஜனநாயக வெளி அவசியம்.

அடுத்த பொருளாதார மீட்சிக்காக இராணுவச் செலவீனங்களை குறைத்தல் மிகவும் அவசியமானதாகும். வெறும் சட்டங்களாலும் வரிகளளாலும் மட்டும் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த முடியாது.

ஜனநாயக ரீதியில் சமூகக் கடமைகளை உருவாக்குவது தற்போதைய பொருளாதாரத் தளம்பல் நிலையில் மிகவும் அவசியம்.

மேலும் திண்மப் பணத்தினை வெளியே மக்களுக்கு நிவாரணமாக வழங்க குறித்த அளவு பணத்தினை அச்சிடவேண்டிய தேவையும் சமூக பொருளியல் நோக்கில் அவசியமானதாகும்.

தற்போது இலங்கையில் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு பொருளாதாரச் சுமையும் உத்தேசிக்கப்படுகின்ற சனாதிபதித் தேர்தல் பற்றிய எதிர்பார்ப்புக்களுமே காரணமாகும். எனவே அரசியல் ரீதியில் தொழிற்சங்கப் போராட்டங்கள் சமூக குழப்பங்களுக்கும் நாட்டின் மொத்தப் பொருளாதாரத் தாழ்வுக்கும் காரணமாக அமைந்துவிடும். இவற்றினை நாம் கடந்த காலங்களில் கண்ணுற்றோம். எனவே இவை எதிர்காலத்தில் நடைபெறாது இருக்க வகை செய்தல் வேண்டும்.

மேலும் இனரீதியான அரசியல் செயற்பாடுகள் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்கல்களில் இல்லாது அமைந்தாலேயே நாம் சமூக முரண்பாடு இல்லாத பொருளாதார மேன் நிலையையும் சுபீட்சத்தினையும் அடைய முடியும்.

# மாலைதீவின் தவறான அணுகுமுறை!

**முனைவர் வைகைச்செல்வன்**

மாலத்தீவு அமைச்சர்களின் சர்ச்சைக்குரிய பதிவுகளால் மாலத்தீவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவில் இடைவெளி ஏற்பட்டிருக்கிறது. இந்தியப் பெருங்கடலின் நடுவில் அமைந்துளள சுமார் 1200 பவளப் பாறை தீவுகள் மற்றும் வளைய வடிவத் தீவுகளைக் கொண்டது மாலத்தீவு. இந்த தீபகற்பத்தின் மக்கள்தொகை சுமார் 5 லட்சத்து 20 ஆயிரம்.

இது இந்தியாவின் மக்கள்தொகையோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவு. அது சிறிய தீவு நாடாக இருப்பதால் உணவு, உள்கட்டமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றம் அனைத்திற்கும் அண்டை நாடான இந்தியாவையே பெரும்பாலும் நம்பி உள்ளது.

மாலத்தீவின் தலைநகரான மாலேவில் வசிப்பவர்கள் இரு நாடுகளுக்கிடையிலான மோதல் என்பது இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளைப் பாதிக்கக் கூடும் என்று கவலைப்படுகின்றனர். இந்தியாவில் இருந்து எழும் மாலத்தீவு புறக்கணிப்பு கோரிக்கைகள் தங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது என்றும், தங்கள் மாலத்தீவு அரசு இதுகுறித்து சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் கூறுகிறார்கள்.

பாலிவுட் திரைப்படங்கள் பார்த்து வளர்ந்த மாலத்தீவு மக்களுக்கு இந்தியாவுடன் வலுவான கலாசாரப் பிணைப்பு இருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

லட்சத்தீவுக்கு சுற்றுலாப் பயணங் களை ஊக்குவிக்கும் வகையிலான படங் களை இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டதைத் தொடர்ந்து மூன்று மாலத்தீவு அமைச்சர்கள் சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

இதனால் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தொடர்ந்து இந்தியர்கள் பலரும், மாலத்தீவு செல்வதற்கான விடுமுறைத் திட்டங்களை ரத்து செய்து விட்டனர். மாலத்தீவு அதிபர் முகம்மது மூயிஸ் பெய்ஜிங் கில் அரசுப் பயணத்தை மேற்கொண்டி ருக்கும் சமயத்தில்தன் இந்த சர்ச்சை வெடித்தது. சீன ஆதரவுக் கொள்கையை விரும்பும் மூயிஸ் சீனாவில் இருந்து மாலத் தீவுக்கு மேலும் சுற்றுலாப்பயணிகளை அனுப்பும்படி சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



கொவைட் 19 நோய்த்தொற்றுக்கு முன் மாலத்தீவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் சீன நாட்டவரே அதிகம் இருந்தனர். ஆனால், பெருந்தொற்றுக்குப் பிறகு, சீனாவில் விமான கட்டணங்கள் உயர்ந்துள்ளதால் சுற்றுலாப்பயணிகள் பெரும்பாலோர் மாலத்தீவுக்குப் பயணம் செய்வதை விரும்பவில்லை.

“கொள்ளை நோய்த்தொற்றுக்கு முன்பு சீனா எங்கள் முதன்மைச் சந்தையாக இருந்தது. அந்த நிலையை நாங்கள் மீண்டும் பெற, சீனா முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை என்கிறார் மூயிஸ்.

ஆனால், சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்த மூன்று அமைச்சர்களின் மீது எந்தவிதமான வலுவான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக அமைப்புகளில் ஒன்றான அனைத்து இந்திய வணிகர்கள் கூட்டமைப்பு, மாலத்தீவு அதிகாரிகள் மன்னிப்பு கேட்கும் வரை தங்கள் உறுப்பினர்கள் மாலத்தீவுடன் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டாம் என்று அறிவிப்பு விடுத்துள்ளது.

வணிகர்களின் புறக்கணிப்பு அறிவிப்பு மாலத்தீவில் வசிக்கும் இந்தியர்களை நிச்சயம் பாதிக்கும். ஏனென்றால், அங்கு கட்டுமானம், சுற்றுலா மற்றும் சில்லறைத் துறைகளில் சுமார் 33 ஆயிரம் இந்தியர்கள் பணியாற்றுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சிக்கு வந்த பிறகு மூயிஸ், 77 இந்தியத் துருப்புக்களை நாட்டை விட்டு வெளியேறக் கோரியதில் இருந்து இந்தியாவுக்கும், மாலத்தீவுக்கும் இடையே பதற்றம் உருவானது.

இந்தியப் பெருங்கடல் தீபகற்பம் நீண்டகாலமாக இந்தியா செல்வாக்கு செலுத்தும் கடல் பரப்பாக உள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

# மாலைதீவின் தவறான...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

மூயிஸ் அதை மாற்ற விரும்புவதாகத் தெரிகிறது. அவரது தேர்தல் பிரசாரம் “இந்தியாவே வெளியேறு” கோஷத்தை முதன்மையாகக் கொண்டிருக்கிறது. இந்தியத் துருப்புகளை வெளியேற்றும் வாக்குறுதியுடன் இருந்தது.

மூயிஸின் பேச்சுக்கள் அவரது ஆதரவாளர்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு உணர்வை அதிகப்படுத்தி இருக்கிறது. இதன் தொடர்ச்சியாகத்தான் இளம் அமைச்சர்கள் இந்தியாவுக்கு எதிராக இத்தகைய சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். மாலத்தீவு இந்தியாவை விலக்கி வைத்து விட முடியாது. ஒரு நாடு மற்றொரு நாட்டு தூதருக்கு சம்மன் அனுப்பினால் பல்வேறு விவகாரங்கள் குறித்து அதிருப்தியை

வெளிப்படுத்தலாம். அல்லது ஒரு பிரச்னையின் தீவிரத்தை எடுத்துரைக்கலாம்.

2016-இல் அப்போது ஆட்சியில் இருந்த மாலத்தீவு முற்போக்கு கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அகமது இந்தியாவுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட விவகாரத்தில் அப்போதைய மாலத்தீவுக்கான தூதர் அகிலேஷ் மிஸ்ராவுக்கு மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் சம்மன் அனுப்பியுள்ளது. 2018-லும் அகிலேஷ் மிஸ்ராவுக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

மாலத்தீவு அதிபர் தேர்தலில் முறைகேடு நடந்ததால், மாலத்தீவின் மீது இந்தியா படையெடுக்க வேண்டும் என்கிற சர்ச்சைக்குரிய கருத்துகள் கூட எழுந்தது. இப்படிப்பட்ட நிலையில்தான், மேலும் மேலும் இருநாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

சுற்றுலா ஒத்துழைப்பு, பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் நீலப்பொருளாதாரம் உள்ளிட்ட 20 முக்கிய ஒப்பந்தங்களில் சீன அதிபர் மாலத்தீவு அரசின் துணையுடன் கையொப்பமிட்டார். இது அவர்களின் இருதரப்பு உறவுகளை மிக ஆழமாக வெளிப்படுத்துகிறது.

ஆகவேதான், சீனாவை முதன்மையான இடத்திற்கு கொண்டு வருவதற்காக, இருதரப்பும் ராஜதந்திரப் பணிகளை ஆற்றி, அதன் மூலம் இந்தியாவைப் புறக்கணிக்க நினைக்கிறது.

1988-இல் மாலத்தீவில் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி நடந்தது. அது இந்தியப் படைகளின் தலையீட்டிற்கு வழிவகுத்த போது, இருதரப்புக்குமான உறவு சவாலை எதிர்கொண்டது. இந்தியாவின் ராணுவத் தலையீடு அப்போது ஒரு சதிப்புரட்சியை முறியடித்து, அது மாலத்தீவின் அரசியல் நிலைத்த தன்மையைப் பாதுகாப்பதற்கான நோக்கத்திற்கானது. ஆனால், இவை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, தற்போது ராஜதந்திர உறவுகளை சீர்குலைத்து வருகிறது.

அதன்பின்னர் முகமது நஷீத் அங்கு அதிபரானதற்குப் பின்னர் இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவு மேம்பட்டது. பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் இருநாட்டு மக்கள் உறவுகளில் கவனம் செலுத்தியது. இந்தியா, மாலத்தீவுக்கான வளர்ச்சிக்கு உதவிகளை வழங்கியது.

குறிப்பாக, உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாடுகளில் 2018-க்குப் பிறகு, மாலத்தீவின் அதிபராக இப்ராஹிம் முகமது சோலி தேர்ந்தெடுக்கப்பட்டது, இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. ஜனநாயகத்தைக் காக்கும் தங்கள் நோக்கத்தை இருநாடுகளும் மீண்டும் உறுதிப்படுத்தின. மேலும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியா நிதியுதவி அளித்தது.

இந்தியாவின் மேற்கு கடற்கரைக்கு அருகில் மாலத்தீவு உள்ளது. மினிகாயில் இருந்து 70 கடல் மைல் மற்றும் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் இருந்து 300 கடல் மைல் தொலைவு.

ஏடன் வளைகுடாவிற்கும், மலாகா ஜலசந்திக்கும் இடையே முக்கியமான கடல் வர்த்தகப் பாதைகளில் அமைந்துள்ள மாலத்தீவு இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் கிட்டத்தட்ட பாதி அளவுக்கும், அதன் எரிசக்தி இறக்குமதியில் 80 சதவீதத்துக்கு மேலும் பயணிக்கும் டோல்கேட்டாக செயல்படுகிறது.

மாலத்தீவு இந்தியப் பெருங்கடலில் ஒரு விரிவான கூட்டமைப்பு போல் அமைந்துள்ளது. ஆகவே, அதன் நிலைத்த தன்மைக்கும், பாதுகாப்புக்கும் இந்தியா ஆதரவாக உள்ளது.

இந்தியப் பெருங்கடலில் வளர்ந்து வரும் சீனாவின் செல்வாக்கை சமநிலைப்படுத்த இந்தியாவிற்கு மாலத்தீவு ஒரு வாய்ப்பை வழங்கி வந்த நிலையில், தற்போதைய சூழலில் அவை மாறுபடுவதற்கான வாய்ப்பிருக்கிறது. இந்தியா மாலத்தீவின் மிகப்பெரிய முதலீட்டாளர் மற்றும் சுற்றுலா சந்தைகளில் ஒன்றாகும். இந்தியா மாலத்தீவுக்கு அன்றாட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகிறது. குறிப்பாக, அரிசி, மசாலா, பழங்கள், காய்கறிகள், கோழிகள், மருந்துகள், உயிர்காக்கும் மருந்துகள்.

ஒவ்வோர் ஆண்டும் மாலத்தீவு மாணவர்கள் இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கு படிக்க வருகிறார்கள். 2022-23 இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையே நடந்த மொத்த வர்த்தகம் ரூ.50 கோடியில், மாலத்தீவிற்கான இந்தியாவின் ஏற்றுமதி ரூ.49 கோடியாகும். ஆகவே, மாலத்தீவின் இரண்டாவது வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருக்கிறது. 2004-இல் தீவுகளை சுனாமி தாக்கிய போது, முதலில் உதவிக்கு விரைந்தது இந்தியாதான்.

2016-ஆம் ஆண்டு பெரிய உப்புநீக்கும் ஆலை உடைந்ததால் குடிநீருக்கு நெருக்கடி ஏற்பட்ட போது, இந்தியா ஒரே இரவில் தீவுகளுக்கு குடிநீரை விமானம் மூலம் அனுப்பியது. கொள்ளை நோய்த்தொற்று காலத்தில் மாலத்தீவுக்குத் தேவையான மருந்துகள், முகமூடிகள், கையுறைகள், தடுப்பூசிகளை இந்தியா அனுப்பியது.

ஆகவே, மாலத்தீவு இந்தியா குறித்து தவறான கருத்துகளைப் பரப்புவதும், சீனாவை ஆதரிப்பதும் மிக மிக தவறான செயல்பாடுகளாகும். ஆழமான கலாசார பரிமாற்றங்களையும், புரிதலையும், மக்களின் உறவுகளையும் வலுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் மாலத்தீவு இருக்கிறது. இந்நிலையில் அது இந்தியாவைப் புறக்கணித்தால் பெரும் விளைவுகளையும், சரிவுகளையும் சந்திக்க நேரிடும். இதனை மாலத்தீவு புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

(கட்டுரையாளர்: முன்னாள் அமைச்சர்.)





